608

ஜகன் மோகினி

ஏவிளம்பி ஆு கார்த்திகை மீ 1-12-57. 25 நயா பைசா

கலை பேசுகிறது

மலர் 34. இதழ் 12

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - FEB 1958
MADRAS

JL
ஜகன் / M225M
M57.34.12.
188245

ஜகன்மோகினி

ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி

டிசம்பர் 1957. மலர் 34, இதழ் 12. ஏவிளம்பி ஹு கார்த்திகை மீ

பொருளடக்கம்

பக்கம்		பக்கம
விஷப் பரீட்சையா? விஷமப் பரீட்சையா? —V.K.பார்த்தசாரதிஐயங்கார்	1	
சினிமாவில் சிந்தாமணி ஹாஸ்ய நடிகர் ஸ்ரீ L. நாராயணராவ்	4	
பாட்டியின் பரபரப்பு சாரக்ராகி	8	
காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி சாஸ்திரி		55
வை. மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம் —வை.மு.விஜயலக்ஷ்மி		309-353
க்ஷேமலாபங்கள்		(ராப்பர் பக்கம் 2)

க்ஷேமலாபங்கள்

அன்பார்ந்த வாசகப் பெரியோர்களுக்கு, அநேக நமஸ்காரம். உபயக்ஷேமங்கள். கடவுளின் கருணையாலும், அன்பர்களின் ஆதரவாலும், இதோ! பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அமிர்த வர்ஷத்தைப் பொழிந்து நிற்கும் ஜகன்மோகினி 34-வது வயதைக் கடந்து 35-ஐ ஜனவரி முதல் தேதி அடையப் போகிறாள். இது யாவரும் அறிந்த சந்தோஷச் செய்தியே.

'வை. மு. கோ ஏன் தொடர்ந்து எழுதவில்லை ?' என்ற கேள்வி சுமார் இரண்டு வருடங்களாகவே இருந்து வருகிறது. கடிதம் மேல் கடிதம் இவ்வினாவைத் தாங்கிக்கொண்டு வந்தவண்ணமிருப்பது ஓயவேயில்லை. மேலும் வீட்டிற்கு வருபவர்களும் இதை கேட்கிறார்கள். யார் என்ன கூறியும், கேட்டும் அவர் எழுத முடியாத நிலையிலேயே இருந்ததைப் பார்க்க எங்களுக்கே பரிதாபமாக இருக்கும். இருப்பினும் நாங்களும் எத்தனையோ ஆறுதல் கூறினோம், வேண்டினோம், நச்சரித்தோம். எழுதினாலாவது மனது சிறிது நேரம் வேறு விஷயத்தில் திரும்புமோ என்ற ஆவல் எங்களுக்கு. அசையாது இருந்த பாட்டியின் மனம் இப்போதுதான் அசைந்து கொடுக்கலாயிற்று. தனக்காக எழுத மனம் வராவிட்டாலும், கை ஓடாவிட்டாலும், பலரது தூண்டுதலுக்காகதான் ஒப்பக் கொண்டாரோ? எப்படி யிருந்தால் என்ன? நமக்கு வேண்டியது பாட்டியின் கதைதானே!

விஷப் பரீக்ஷையா? விஷமப் பரீக்ஷையா?

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதிஅய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

'தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு'

பல கிராமங்களாலாயது ஒரு நாடு. கிராமங்களின் இலக்கணமே நாடுகளில் பிரதிபலிப்பதாகும். ஹிந்துக்களது கிராமம் வர்ணாச்ரமக் கட்டுப்பாடுள்ள சமூகத்தார், அறம் வளர்க்கும் தெய்வீகத் தலம்.

அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாம்...

ராமராஜ்யம் வேண்டிய காந்திமகான் பெற்றுத் தந்த சுதந்திரம் கிடைத்த பத்தாண்டுகள் போயினபின், ஹிந்து மத, சமூக, பொருளாதார, அரசியல் நிலையெல்லாம் அலங்கோலமுண்டு, அலைகடல் திரைபோலக் கொந்தளித்துக் கலங்கி நிலையற்றிருக்கும் இன்றைத்தான், நமது குடியரசு, நம் நாட்டில் கிராமராஜ்ய ஸ்தாபனஞ்செய்ய நினைவு கொண்டுள்ளது.

இந்த நினைவு, உண்மைக் கிராம ராஜ்ய ஸ்தாபன எண்ணத்தோடா?—. கிராமம் என்றால் யாது என்பதையோ, கிராம பஞ்சாயத்து ராஜ்யத்தின் நோக்கத்தையும், உட்கருத்தையுமோ எவர்களாவது பரிவுடன் பரிசீலித்துப் பார்த்ததுண்டா?— நாட்டின் சமூகத்தாருக்கு வேண்டிய உணவும், தர்மானுஷ்டான ஊக்கமும், பாதுகாப்பும், செல்வமும் கொடுக்கவல்ல தேக ஆத்ம திடம் மிகுத்துவோரை ஆக்குவித்து ஆதரிக்கும் அற ஊற்று, நமது ஹிந்து கிராமங்கள். நாட்டின் சமூக விருக்ஷத்தின் அழுத்தமான ஆணி வேர்கள் நமது முன்னோர் வகுத்த கிராம அமைப்பும் அரசியலும். ஆனால், இன்றைய நிலையிலோ, அந்த ஹிந்து சமூக ஆல விருக்ஷமே, பலவிதமாக வெட்டுண்டு, துண்டுபட்டு, வேர் தளர்ந்து, உருமாறி நிற்கிறதே! மக்களுக்கு உண்ணப் போதிய உணவுபொருளில்லை; உடுக்கத் தேவையான உடுக்கைகளில்லை; இருக்கத் தேவையான இடவசதிகளும் காணோம். உழவர்களெல்லாம் உத்தியோகம் அவாவில் கிராமம்விட்டு வெளியேறிப் போகின்றனர். எஞ்சிய நிலச்சொந்தக்காரர்களுக்கும் உழுது பயிரிடுவோர்களுக்குமிடையே எள்ளளவு அந்யோந்யமும் இருக்கவிடாது, சந்தேகமும் துவேஷமும் வளர்க்கும் அரசாங்கச் சட்டங்கள் அமலுக்கு வந்துகொண்டுள்ளன. இந்நிலையில், கிராமங்களுக்குச் சென்று உழுது பயிரிடவேண்டுவோர் எவர்? பயிரிட நிலமும் இராதுபோலவும் தோன்றுகிறதே! உண்ணும் உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து விலைக்கோ, இரவலாகவோ வரவழைத்துத் தின்னும் ருசி, நமக்குப் பழக்கப்பட்டும் விட்டது. விஞ்ஞான ஞானம், இயற்கைப் பொருள்களுக்கெல்லாம் செயற்கை பிறப்பு கொடுத்து வரவே, உண்மை இயற்கை ஒழிந்து, போலிச் செயற்கையே எதிலும் ஏற்கப்படுவதாகிவிட்டது. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டவள் கதைபோல, நாம் இன்று, உள்ளதையுமிழந்து பரதவிக்கிறோம்.

வள்ளுவர் வகுத்த அறத்தின் கதி இதுவா?

சமூக நிலைமை இப்படியிருக்க, நமது அறம் வளர்ப்பு எங்
நிலையிலுள்ளது?—. அறம் என்ருல் என்ன என்பதுதான்
இன்றையப் பெரும் பிரச்சினை. வேதம் விதித்தது அறமா?—
மதப்பற்றற்ற அதிகாரிகள் இன்று விதித்துப் போவதுதான்
அறமா?—. கிருஸ்தவ மதமும், முஸ்லீம் மதமும், இதர பெரும்
மதங்களும், இன்றும் தத்தம் புராதன வேத வழியொழுகிப் பல
ஜாதி சமய உட்பிரிவுகள் கொண்டே, திடத்த கட்டுப்பாடுகளு
டன் தத்தம்மாலான அறம் வளர்த்து வருகின்றன. ஆனுல்,
நமது ஹிந்து மதஸ்தர்கள் மட்டும், நமது வேதம் வகுத்த அறம்
மூடநம்பிக்கைகளென்றும், சமூக வேற்றுமை வளர்ப்பவை யென்
றும், மதிப்பிற்குரியதல்ல வென்றும் பழித்து, அதற்குப் புத்த
மைப்பு கொடுத்திட முன்வந்துள்ளார்கள். உலகம் புகழும்
நமது புராதன வேத மதம், நமது சமூகத் தலைவர்களாலேயே இக
ழப்பட்டு, மதப்பற்றற்ற அரசாங்கக் கண்காணிப்புக்கு ஆளாகி,
இயற்கைப் பெருமைகளிழந்து; செயற்கைப் புத்துரு கொடுக்கும்
ஆராய்ச்சிச் சாலையிலகப்பட்டுத் தவித்து வருகிறது.

'அறத்தினூஉங்காக்கமுமில்லை யதனை
மறத்தலி னூஉங்கில்லை கேடு'

என்கிருர் தமிழ்ப்பெரியார் திருவள்ளுவ நாயனுர்.

'அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்'

என்றும்,

'அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்'—

என்றும், நமது வேதத்திற்கும், தர்மத்திற்கும், அரசிற்குமாகிய
இணைப்பின் பெருமையை எடுத்துக்காட்டுகிருர் தமிழ்ப்பெரியார்
திருவள்ளுவர்.

காந்திஜீ கண்ட ராமராஜ்யமா இந்த கிராம ராஜ்யம்?

'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'—, என்று, வையம்
வாழ்ந்திட இன்றியமையாத் தேவைகளான அந்தணர், ஆனி
னம், வானவர் இவர்களின் நலம் கோரித் தெய்வத்தைப் பிரார்த்
திக்கிருர் தமிழ்ப்பெரியார் திருஞானசம்பந்தரும். ஆனுல், இன்
றைய ஹிந்து தமிழ்ச் சமூகப் பெரியாரோ, அந்தணர்களை அழித்
துப் பொசுக்கி, அவரது பூணூலை அறுத்தெறிய முன்வந்துள்
ளார். ஆனினந்தான் இன்று இருக்குமிடந்தெரியவில்லை செயற்
கைப் பால் பொடிகள் நிரம்பிய நம் நாட்டில். தோலுக்கும், மாமி
சத்திற்குமே ஆனினம் பயன்படுத்தப்படுகின்றன போலும்.
வானவரைச் சிந்திப்பவர் வீணவரேயாக்கித் தண்டிக்கப்படுகின்ற
னர். ராமராஜ்யம் கோரிய காந்திமகானது சுதந்திர இந்தியா
வில், அசுர ராஜ்யமே ஸ்தாபிதமாக வேண்டுமெனத் தமிழச்சமூ
கப் பெரியார், பல தியாகங்கள் ஏற்கவும் முன்வந்துள்ள இன்
றைய ஹிந்து சமூக நிலைமையிலா பஞ்சாயத்து ஆட்சி சாந்தி
யும், செழுப்புமான நற்பலனளிக்கக்கூடும்?— கடந்த அரசியல்

18325

தேர்தல்களின் விளைவான முதுகளத்தூர் கிராமங்களில் நடந்தேறிய விளைவுகளும், மற்றும், 26-11-57-க்குத் திட்டமிடப்பட்டு நடந்தேறிய திராவிடக் கழகத்தது போன்ற ஹிந்து சமூக அரசியல் கலகத் துவேஷப் பிரச்சினைகளும் தீர்க்கப்படாத நிலைமையில், பஞ்சாயத்துத் தலைவர்களைப் பொதுத் தேர்தல்கள் மூலம் தெரிந்தெடுக்கச் சட்டம் வகுத்தால், நட்புறவு நிலவும் கிராம வாழ்க்கையோ, அறந் திகழும் பஞ்சாயத்து ராஜ்யமோ நமதுநாட்டில் நிலவக்கூடுமா? சுய மதப்பற்று இழந்து சச்சரவிடும் ஹிந்துவை, சுயமதப் பற்றுமிக்க இதர மதஸ்தர்கள் போற்றிப் புகழ்வரோ? தூற்றி இகழ்வரோ?—.

கையில் இருக்கும் களாப்பழத்தைவிட் நாளை வரும் பலாக்காயா மேலானது?

சமீபத்தில், 17-11-57-ல் நடந்தேறிய உலக மதங்களின் மகாநாட்டில், நமது பிரதமர் நேருஜி பேசியபொழுது,—'நான் இந்தக் கூட்டத்திற்கு எப்படி வந்து சேர்ந்தேன்? இதில் ஏன் கலந்து கொண்டேன்!—எதற்காக வந்துளேன்?'—என்று தன்னைத் தானே சந்தேகித்துக் கேட்டுப் பேசினராம். மதாபிமானிகள் கூட்டத்தில், மதப்பற்றற்ற பெரியார் நிலைமை அப்படித்தானிருக்கச் செய்யும். அவரவர் சுய மத நம்பிக்கையை வற்புறுத்தாது, மதப்பற்றற்ற வரண்ட நட்பும், நல்லுறவும் உபதேசிப்பதால் நற்பலன் என்ன கிட்டக்கூடும்?—.

மதப்பற்றின்மை மிகுந்த இங்கிலையில், இரண்டாம் ஐந்தாண்டு திட்ட திண்டாட்டம் வேறு. இதற்காகப் பல புது வரிகள் சுமத்தப்பட்டாகிவிட்டது. மீண்டும் புது வரிகளில்லையென்று முன்னம் கொடுக்கப்பட்ட உறுதிமொழி மாறி, மேலும் புது வரிகள் சுமத்தப்படக்கூடுமென்ற பயங்கர ஒலி, அதிகாரவட்டங்களில் பரவி வருகிறது. அரிசிப் பஞ்சம் வேறு வந்துவிட்டேன்னென எச்சரிக்கிறது. கையிலிருக்கும் களாப்பழத்தை விட்டெறிந்து, நாளைக் காய்த்துப் பழுக்குமோ என்ற பலாப்பழத்திற்கு ஏங்குங் கதைபோலத்தானிருக்கிறது நமது மதப்பற்றற்ற அரசாங்கத் திட்டங்கள் பலவும்.

போதாக்குறைக்கு, ரயில் விபத்து, வருடந் தவருமல், காலாகால நிகழ்ச்சிபோல நடந்து வருகிறது. போன வருடம் அரியலூர் ரயில் விபத்து நடந்த இதே காலத்தில் இன்று 23-11-57-ல் இகாத்புரி விபத்து நேர்ந்துளது. இதுவும் கட்சி துவேஷ விளைவு என்றே சந்தேகிக்கப்படுகிறது.

விதை ஒன்று போட்டால், சுரை வேறு முளைக்குமா?

இங்கிலையில் மதப்பற்றற்ற நமது குடியரசு, வர்ணாச்சிரமதர்மமே அடிப்படையாகக்கொண்ட ஆத்மபலக் களஞ்சியமாம் புனித கிராமங்களை, ஆத்ம விசார நோக்கொழித்த பஞ்சாயத்து ஆட்சி ஸ்தலங்களாக்கத் தீர்மானித்திருப்பது விந்தையே!

பஞ்சாயத்து ஆட்சி அவசியமே—. ஆனால், இன்றைய நிலையில் நிறுவப்படும் பஞ்சாயத்து ஆட்சி, உண்மைக் கிராம வாழ்க்கைப் பலன் ஈந்திடுமா?—விதையொன்று போட்டால்

★ சினிமாவில் சிந்தாமணி ★

ஹாஸ்ய நடிகர் ஸ்ரீ L. நாராயணராவ்

ஒரு குடும்பத்தில் ஒருவரைப்போல் ஒருவர் ஒரே சாயலாக இருந்தால் அவர்களைப் பார்க்கும்போது "அடாடா... இவர்கள் இந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களா? பார்க்கும்போதே ட்ரேட் மார்க் தெரிகிறதே. தம்பியாகவோ தங்கையாகவோ இருக்க வேண்டும் என்றுதான் நானும் நினைத்தேன்'' என்று தெரிந்தோ தெரியாமலோ முற்றுப்புள்ளி வைத்துப் பேசுவது உலக வழக்கம். இதனால் சங்கடமும் இல்லை, சந்தேகமும் இல்லை. ஆனால் எந்தவிதமான ஸ்நான ப்ராப்திகூட இல்லாத ஒருவருக்கும் மற்றொருவருக்கும் ஒரே சாயல் இருந்துவிட்டது என்றால் அடாடா... அந்த சங்கடத்தையும், உபத்ரவத்தையும் கூறமுடியுமா? அனுபவித்தவர்களுக்கல்லவா தெரியும். நான் அனுபவித்த ஒரு சின்ன சம்பவத்தை நானே சொல்கிறேன் கேளுங்கள்.

அஸ்வத்தம்மா நடித்த **சிந்தாமணி** படம் ஓடிக்கொண்டிருந்த காலம் என்றால் அது எத்தனை வருஷங்களுக்கு முன்பு என்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். ஒரு தியேட்டரில் சிந்தாமணி படம் ஓடிக்கொண்டிருந்தது. அந்த சமயம் யார்வீட்டு கல்யாணத்திற்காகவோ என்னுடைய பந்துக்கள் சிலர் ஊரிலிருந்து வந்து இருந்தார்கள். அவர்கள் சிந்தாமணி படம் பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டு என்னைக் கேட்டார்கள். நான் சினிமா நடிகனாக இருந்தாலும்கூட ஓசி டிக்கட்டில் போய் ஒய்யாரமாய் படம் பார்க்கும் வழக்கம் எனக்கு என்றுமே கிடையாது. வெளியூரில் இருந்து வந்தவர்களின் ஆசைக்காக உயர்ந்த வகுப்பு டிக்கட்டுக்காக காசையும் செலவு செய்து அழைத்து சென்று இருந்

[முன் பக்கத் தொடர்ச்சி]

சுரை வேறு முளைக்காதே!—. 'அசுரர்களை அழித்த அந்தணர் அழிக்'—என்ற பெருங் கூச்சல், மனித ரத்தங் கோரி, வெறித் தீயாகிப் பரவிக் குமுறும் இன்றைய ஹிந்து சமூக நிலைமையில், அத்தீயை அவியாது, ஆத்ம விசாரவழி அரசு செல்லாது, ஆத்ம சிந்தனையில் குடிகள் மனம் நாடப்பழக்காது, கிராமப் பஞ்சாயத்து நிருவித் தேர்தல்களை நடத்துவோமானால், அதனால் விளையக்கூடிய விபரீதங்களை எடுத்துரைக்கவும் வேண்டுமோ?—. 26-11-57-ல் திருச்சியிலும், எல்லாத் தமிழ்நாடுகளிலும் சட்டப் பாதுகாப்பையும் மீறி நடந்தேறிய, பிராமணர் சிகை, பூணூல் அறுப்பும், அரசியல் சட்ட எரிப்புமே நாளை விளையக்கூடிய விபத்துக்களின் சூசிகையாய் அமைந்துளதே!—இந்நிலையில், கிராமப் பஞ்சாயத்து ஆட்சி நிருவுவது, விஷப்பரீக்ஷையா?—விஷமப் பரீக்ஷையா?—.

—

தேன். நல்ல வேளையாக நாங்கள் போகும்பொழுது படம் ஆரம்பமாகிவிட்டதால் டார்ச் வெளிச்சத்தில் தட்டித் தடுமாறி போய் ஆசனங்களில் உட்கார்ந்துகொண்டோம். இடைவேளை விளக்கு போட்டதுதான் தாமதம். "அடேடே...ஆழ்வார்செட்டி, அஸ்வத்தம்மா...அதோ உட்கார்ந்து இருக்கிறார்களே" என்ற கூக்குரல் எங்கு இருந்தோ நாலாபுறமும் கிளம்பி எங்களிடமே வந்துவிட்டது. இந்த விவரம் ஒன்றும் எனக்கு முதலில் புரியவே இல்லை. என்னோடு வந்திருக்கும் உறவினரில் ஒரு பெண் அஸ்வத்தம்மாவைப்போலவே ப்ரத்யக்ஷமாக இருப்பதை அதுவரையில் நான் கூர்ந்து கவனிக்கவே இல்லை. இதை நீங்கள் நம்பினால் நம்புங்கள், இல்லையேல் போங்கள். அதன் பிறகுதான் எனக்கும் அந்த சாயல் ஊர்ஜிதமாய்பட்டது. என்ன செய்வது என்று எனக்குத் தெரியாது தத்தளித்தேன். கூட்டம் சூழ்ந்து கொண்டு அஸ்வத்தம்மா...ஆழ்வார் செட்டி என்று கூக்குரல் இடுவதைப் பார்த்தால் நானே திகைத்துவிட்டேன் என்றால், முன்பின் அறியாத அந்த பெண்ணுக்கு எப்படி இருக்கும், நீங்களே சொல்லுங்கள். திருக திருக விழித்துக்கொண்டு அந்த பெண் "மாமா...இது ஏனு மாமா...ஏதோ ஹேளித்தரே..." என்று எங்கள் பாஷையிலேயே கேட்டுக்கொண்டு அவள் தாயாரை இருகப்பிடித்தவாறு என் அருகில் வந்து நின்றாள்.

"ஆழ்வார் செட்டியாரே பொட மீத பாககீகி வேள்ளீள்ளு போசினட்டு உந்தி..." என்றான் ஒரு துடுக்கு வாலிபன். அதை தொடர்ந்து ஹோ என்று சிரித்தார்கள் மற்றவர்கள். இதற்குள் இன்னொருவன் "க்ருஷ்ணா...க்ருஷ்ணா முறையை கேளீர்" என்று பாடினான். உடனே "ஹே அஸ்வத்தம்மா..."என்று கூக்குரல் இட்டார்கள்.

அட கடவுளே! இது என்ன சோதனை. இதுமாதிரி ஒரு கட்டம் படத்தில் வந்து இருந்தால் அழகாய் நடித்திருப்பேனே. இந்த பகிரங்க சங்கடத்திற்கு என்ன செய்வேன் என்று புழுங்கியவாறு அந்த கூட்டத்தை பார்த்து "அப்பா...உங்களுக்கு எல்லாம் நமஸ்காரம் பண்ணுகிறேன். நான் ஆழ்வார் செட்டியே தான்...இல்லை என்று சொல்லவில்லை. ஆனால்...இந்தப்பெண் அஸ்வத்தம்மா...அல்லப்பா...அல்ல. இந்த பட்டிணத்தையே பார்த்து அறியாத பட்டிக்காட்டுப்பெண். தயவு செய்து நீங்கள் எல்லோரும் விலகிப் போங்கள்" என்று நான் எவ்வளவு கத்தினாலும் அவர்கள் காதில் வாங்கினால்தானே? "ஓய் சும்மா இரும் அய்யா...அஸ்வத்தம்மா ஒரே ஒரு பாட்டு" என்கிறான் ஒரு ஆள். இன்னும் இரண்டொரு ப்ருஹஸ்பதிகள் சிறிய நோட்டு புஸ்தகத்தை நீட்டி பல்லை இளித்தவாறு"...ஹி...ஹீ...அஸ்வத்தம்மா. உங்கள் ஆட்டோக்ராப் வேணும்" என்றார்கள். உண்மையில் எனக்கு வந்த கோபம் அளவு மீறிவிட்டது. இருந்தும் பொறுமையை வரவழித்துக்கொண்டு கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். பகவான் எனக்கு க்ருபை செய்ததுபோல் இடைவேளை முடியும் மணியும் அடித்து விளக்கும் அணைந்தது. கூட இருந்த சில

பெரிய மனிதர்கள் எத்தனை சொல்லியும் கேளாத பித்து பிடித்த கூட்டம் விளக்கணைந்தவுடன் ஆழ்வார் செட்டி...அஸ்வத்தம்மா என்று இரைந்தவாறு தம் இருப்பிடத்தை தேடி ஓடினார்கள்.

அப்பப்பா...படமும் பார்க்க வேண்டாம், வயிறும் பற்றி எரியவேண்டாம். வீடு போய் சேர்ந்தால் போதும் என்றாகிவிட்டது என்பாடு. படம் முடியும் வரையில் இருந்தால் உருப்படியாய் திரும்ப முடியாது என்று தோன்றிவிட்டதால் திருடனுக்கு தேள் கொட்டியதுபோல் சந்தடி செய்யாது அவர்களை அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். செத்தோம், பிழைத்தோம் என்று அந்த பந்துக்கள் மறுநாளே ஊருக்குப் போய்விட்டார்கள். என்னுடைய வாழ்க்கையில் இம்மாதிரி ஒரு சம்பவம் முன்னும் நடக்கவில்லை, பின்னும் நடக்கவில்லை. ஆனால் இன்னும் விசித்ரமான அனேக சம்பவங்கள் என்னுடைய வாழ்க்கையில் நடந்து இருக்கின்றன. ஜகன்மோகினி வாசக அன்பர்களே! அவைகளில் சாரமான—ருசிகரமான—நினைவு இருக்கும் ரசமான விஷயங்களை 1958-ம் வருடம் ஜனவரி மாதம் (மோகினியின் 35-வது வருஷம்) முதல் இதழிலிருந்து தொடர்ச்சியாக உங்களுக்கு அளிக்கப் போகின்றேன். காலம் சென்ற வை. மு. ஸ்ரீ. அவர்கள் என்னுடைய ஆப்த நண்பர்களில் ஒருவர். அவருக்கும் எனக்கும், சிநேகம் உண்டாகிய ஆச்சரியத்தை நினைத்து நினைத்து சந்தோஷிக்கிறேன். உலகத்தில் ஒருசாரார், என்னை நாடகக்காரன், சினிமாக்காரன் என்று நினைக்கலாம். என்னுடைய தொழிலுக்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் தாமரையிலைத் தண்ணீர் போன்றது என்பதை வை. மு. ஸ்ரீ. அவர்கள் பலவாகக் கூறி போற்றுவார். சினிமாவிலும், நாடகத்திலும் நான் நடித்தபோதிலும் பால்யம் முதல் நான் எந்த உதவாக்கரை புத்தகங்களையும் படிக்கமாட்டேன். ஏன்? பட்டவர்த்தனமாகச் சொல்லுகிறேன், நாவல் படிப்பதென்றால் எனக்குக் கட்டோடு பிடிக்காது. அக்காலத்தில் சிறந்த முறையில் விளங்கிய சில பத்திரிகைகளை தான் படிப்பேன்.

ஒரு சமயம் எங்களுடைய நாடகக் கம்பெனி மதுரையில் முகாம் போட்டது. அப்போது என்னுடைய நண்பர் மணி என்பவர் "நாராயணராவ்! உம்முடைய கொள்கையை நீர் மாற்றிக் கொள்ள வேண்டும், இதோயிருக்கும் இந்தப் புத்தகத்தை நீர் படித்துப் பார்த்தால், நாவல் படிக்கவேண்டாம் என்ற அபிப்ராயம் உடனே மாறிவிடும்" என்று வற்புறுத்திக் கூறி கொடுத்தார்.

அப்புத்தகம் வேறெதுவும் இல்லை: வை. மு. ஸ்ரீ. யின் தாயாராகிய வை. மு. கோ, எழுதிய 'வீரவஸந்தா' என்னும் புத்தகமேயாகும். உண்மையில் என் நண்பர் கூறியது நூற்றிற்கு நூறு பலித்துவிட்டது. அந்தப் புத்தகத்தை முடித்த பிறகுதான் மறுவேலை செய்தேன். என் வாழ்நாளில் முதல் முதல் படித்த நாவல் அதுவேதான். இன்றைக்கும் என் மனதில் அதே உணர்ச்சிதான் பதிந்திருக்கிறது. இத்தகைய புத்தகம் எழுதிய

ஆசிரியரைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் உண்டு; ஆனால் சந்தர்ப்பம் இல்லை.

இதன் பிறகு "அனாதைப் பெண்" என்ற படத்தில் நடிக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. அப்படப்பிடிப்பு ஆரம்ப விழாவன்று வை. மு. ஸ்ரீ. யும், அவர் குடும்பத்தினரும் வந்திருந்தார்கள். நான்தான் இப்படத்தில் தாசில்தாராக நடிக்கப்போகிறேன் என்று முதலாளி அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இதற்கு முன்பே நான் நடித்துள்ள படங்களை அவர்கள் பார்த்திருப்பதால், வை. மு. ஸ்ரீ. வெகுநாள் பழகியவர்போல் என் நடிப்பைப்பற்றி அளவளாவிச் சொல்லி என் மனத்தையும் கொள்ளைக்கொண்டு விட்டார்.

அன்றுமுதலிலிருந்தே என்னுடைய ஜீவிய சரித்திரம் மோகினியில் வரவேண்டும் என்று விரும்பி கேட்டார். ஆனால் எக்காரணம் பற்றியோ எண்ணம் ஈடேறவில்லை. அவருடைய மனம் திருப்தியுறும்பொருட்டு அவர் கோரிக்கையை நான் நிறைவேற்ற முன்வந்து இருக்கிறேன். நேயர்களுக்கு இது திருப்தி தரும் என்று நம்புகிறேன். 'கடவுள்' இதற்கு துணை புரிந்து வெற்றி அளிக்க ப்ரார்த்திக்கிறேன்.

❋

★ ஒரு சந்தோஷச் செய்தி ★



புதிய தொடர் நாவல் 1—1—58 இதழில் ஆரம்பம்

பாட்டியின் பரபரப்பு

பல வருஷங்களுக்கு முன்பு...வெங்கடாசலம் செட்டி தெருவில் இருந்த சங்கீத சபாவில் அக்காலத்தில் மிக ப்ரஸித்தமான வித்வான் கோனேரி ராஜபுரம் வைத்தியநாத ஐயருடைய கச்சேரி. பக்க ஜமாவோ ப்ரமாதம். அன்றைய முதல்தினம்தான் காயன படு, கீர்த்தனபடு ஸ்ரீமதி சி. ஸரஸ்வதிபாய் அவர்களின் ஹரிகதை நடந்தது. ஆண்களுக்கு மேலாக பெண்கள் கூட்டம் அதிகமாகக் குழுமி இருந்தது. ஹரிகதைக்குள்ள விசேஷம் அது. மறுநாள் கச்சேரி வைத்தாவினுடையது. முன்பெல்லாம் கச்சேரி 4 மணிக்கே ஆரம்பமாகிவிடும். அன்றும் பாகவதர் வருவதற்கு சிறிது நேரம் ஆயிற்று. ஒரு பாட்டி அம்மாள் அவசர அவசரமாக நீந்தி அடித்துக்கொண்டு முன்னால் வந்து உட்கார்ந்தாள். குறித்த நேரத்தில் பாடகர் தம் ஜமாவுடன் பாடத்தொடங்கினர்.

பைரவி ராகத்தில் உள்ள விரிபோணி வர்ணம் விறுவிறுப்பாக பாடும்பொழுது அவசரமாக வந்த பாட்டி அம்மாள் அருகில் இருப்பவர்களுடன் "இது என்ன இது? பாகவதர் காலில் சுஜ்ஜை கட்டிக்கொண்டு நின்று கதை செய்யாமல் உட்கார்ந்திண்டு பண்ணுகிருரே? இப்படியேதான் கதை பண்ணுவாரோ" என்று துணப்பிவிட்டாள். அதற்கு ஒரு அம்மாள் "ஆமாம்...ஆமாம் கடைசிவரை இப்படி உட்கார்ந்துகொண்டுதான் பாடுவார்" என்று அலட்சியமாய் பதில் அளித்தார்கள். வர்ணத்திற்கு பிறகு இரண்டு உருப்படிகள் பாடி விஸ்தாரமாய் கரஹரப்ரியா ராகம் பாட ஆரம்பித்தார். அதுவரை அணைகட்டி வைத்தது போல் அடக்கிக் கொண்டிருந்த பாட்டியின் கோபவெள்ளம் மீறிவிட்டது. தானும் பாட்டை ரசிக்காமல் அருகில் இருப்பவர்களையும் கேட்கவிடாமல் நச்சரித்தவாறு "ஏம்மா! கேக்கறத்துக்கு பதில்தான் சொல்லுங்களேன். முத்தா உதுந்து போயிடும். இவர் எப்போ நின்திண்டு கதை பண்ணுவார். அதை சொல்லுங்கோம்மா. நேத்திக்கி வந்ததுமே ஸரஸ்வதிபாய் அழகா நின்னுண்டு பண்ணுளே. கையிலே ஒரு கட்டை வெச்சிண்டு அடிப்பாளே அதையும் காணோம். தொடையை வெச்சி பொளந்து கட்டி பிச்சி பிட்ருரே பிச்சி...இது என்ன கதை இது" என்று பைத்தியக்காரத்தனமாய் உளறுவதைக் கேட்டு அருகில் இருந்த பெண்கள் கொலோ என்று சிரித்து விட்டார்கள். இந்த சல சலப்பைக் கேட்ட ஆண்கள் "உஸ்...உஸ்...இது என்ன கூச்சல்?" என்ற குரல்கள் கிளம்பியது. அதுவரை சமாளித்த கிழவி பெரும் வெள்ளம் பெருக்கெடுத்ததுபோல் எழுந்தே நின்று "ஏ! சுப்ரமண்ய ஐயரே இப்படி வாரும்" என்று ஒரு பீரங்கி கர்ஜனை முழங்கினுள். அதற்கு மேல் கேட்கவா வேண்டும். பெண்கள் கூட்டத்திலும், ஆண்கள் கூட்டத்திலும் ஒரே சலசலப்பு...கலகலப்பு. சங்கீதத்தின் கம்பீரமும் குறைந்து பாகவதரும் திருக திருக விழிக்கத் தொடங்கினர். இதற்குள் சபா காரியதரிசி

[தொடர்ச்சி 54-ம் பக்கம் பார்க்க]

லக்ஷ்மியின் தலை கிறுகிறுத்தது. "ஆ.......என்ன விபரீதம் காத்து நிற்கிறதோ...நான் கூறி முடிப்பதற்குள் ஓடிவிட்டதே இந்தப் பெண்.... யாரை அழைத்து வருமோ....என் உயிருக்கு உலைவைத்துவிட்டதே....இருக்கும் விதி போதாது, சாமியாரும்,பூசாரியும்வேறுவந்துகூடத் தடிக்க வேணுமா? இவனை கவனிப்பேனா? அவள் பின் ஓடுவேனா?" என்று இருதலைக்கொள்ளி எறும்பாய் தவித்தாள்.

"எங்கே.......எங்கே?" என்ற குரல் எழுந்து அவளை மேலும் கலக்கியது. "ஐயோ அழைத்து வந்துவிட்டாளா?" அவள் வயிறு பகீரென்றது. வேற்று மனிதர் குரல் இல்லை அது. ரகுவின் குரல்தான் என்பதை அறிந்தாள்.

"என்ன ரகு! எதை எங்கே என்று கேட்கிறாய்....... சொல் ரகு கனவு கண்டாயா?" என்று பதறினாள்.

"வள்ளி .. வள்ளி....கத்தி..." என்று கூறி எழுந்து உட்கார்ந்தான். "வள்ளியா? அவள் எங்கே வந்தாள். ரகு நன்றாக என்னைப் பார். உள்ளே போகலாம் வா" என்று முதலில் அவன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

வள்ளிக்குத் தான் இழைத்த துன்பங்களால் நொந்து, தன்னை பழிக்குப் பழி வாங்க கத்தியுடன் வந்ததுபோல் கனவு கண்டதாக ரகு கூறினான். மனதின் எண்ணம் அப்படியே கனவாகப் பிரதிபலித்திருக்கிறது.

"ரகு வீணாக அலட்டிக் கொள்ளாதே. நான் இருக்கையில் யாரும் வரமாட்டார்கள். உன் கனவு பலிக்காது பேசாமல் படு" என்று சற்று அதட்டிக் கூறினாள்.

"சித்தி! என்ன விஷயம்? ரகுவிற்கு ஏதாவது சூடாக பானம் கொண்டுவரட்டுமா?" என்று ரேவதி இழுத்துக் கட்டிய துணியோடு சமையலறையிலிருந்து வெளிவந்தாள்.

முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டிருக்கும், கரிய பூதாகாரமான உடலுடன் கூடிய ஒரு வயோதிக

ருடன் சரோஜா வேகமாக நுழைவதைக் கண்டதும், ரேவதிக்கு ஒன்றும் புரியவில்லை. 'எதற்காக சரோ இப்படி வருகிறாள். இவர் யார்? லக்ஷ்மியிருக்கும் அறைப் பக்கம் சைகை செய்து அழைத்தாள். மெதுவாக வந்து எட்டிப் பார்த்தாள். அவள் முகம் பேயறைந்ததுபோல் வெளுத்தது. 'ரேவதி' என அழைத்தாள். நாவோடு உதடும் ஒட்டி ஒத்துழைக்க மறுத்தது. லக்ஷ்மியின் நிலையைக் கண்டு குழம்பி நிற்கவில்லை ரேவதி. முன் நடந்து சென்று "யார் நீங்கள்" என்றாள் பணிவுடன்.

"நானா? இதோ குழந்தைதான் கூப்பிட்டாள். மந்திரிக்க வேண்டுமாம். யாரோ பயந்துவிட்டார்களாமே?...."

"ஓஹோ...நீங்களா...வாருங்கள்...எனக்குதான் மந்திரிக்கவேண்டும். நேற்று இரவு ஏதோ ஒரு கருப்பான உருவம் என் கண்ணிற்குத் தெரிந்தது, அதைக் கண்டு பயந்துவிட்டேன். இனிமேல் அம்மாதிரி பயம் ஏற்படாதவாறு, வேப்பிலையோ, விபூதியோ போட்டுவிட்டுப் போங்கள்" என்று கூறியவுடன் அமர்ந்தாள்.

"வேப்பிலை ஒன்றும் தேவையில்லையம்மா...விபூதி மந்திரித்தால் போதும்'! என்றவர், ஏதோ 'தாம் தூம்' என்று அதற்குரிய மந்திரங்களை ஓதி விபூதி இட்டார். ரேவதிஎதையும் நோக்காது கண்களை மூடியவாறு அமர்ந்திருந்தாள்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த லக்ஷ்மி மெள்ள வந்து சரோஜாவைப் பிடித்திழுத்துச் சென்றாள். அறையில் சென்று "ஏய்! உனக்கு மூளை என்பது கொஞ்சமாவது இருக்கிறதா....உன்னை யார் இந்த அதிகப்ரசங்கி வேலையெல்லாம் செய்யச் சொன்னது? ரகுவிற்கு மந்திரிக்க இவரை அழைத்து வந்தாயே? இந்த விஷயம் ஊர் முழுவதும் பரவினல் என்ன ஆகுமடி?....என்ன ஆகும்? 'ஐய...... அவன் ஒரு சித்தப்ரமை பிடித்தவன், பேய் பிடித்தவன் பூசாரி வந்து ஓட்டினனும். அவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்?" என் தூற்றுவார்கள். அவனுக்கு மட்டுமா? அவனுடைய தங்கை என்று உன்னையும் யாரும் கட்டமாட்டார்கள், ரேவதிக்கு, ரஞ்சனுக்கு, வாஸுவிற்கு எல்லோருக்கும் இதே கதிதான். பிறகு என் கதி என்ன? இதையெல்லாம் யோசித்தாயா?" என்று அவளைப் பலவிதங்களில் மடக்கினள். எதற்கும் பதில் கூறாது விழித்தவாறு நின்றிருந்தாள் சரோஜா.

அதற்குள் ரேவதி "ம்....மந்திரித்தது போதும். இனி, வரவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாது. நாங்களே, ஏதாவது நமோதான ஆள் அனுப்பினல் வந்தால் போதும். இந்தாருங்கள்" என்று தாம்பூலத்தை அவர் கையில் கொடுத்

தாள். அப்பூதாகார உடலும் நகர்ந்தது. ரேவதி உள் திரும்புவதற்குள், லக்ஷ்மி ஒரே தாவில் தாவி ரேவதியை இறுக அணைத்துக்கொண்டாள். காரணம் புரியாததோடு இந்தப் பிணைப்பு அவளை திணறடித்துவிட்டது.

"சித்தி! என்ன....விடு என்னை" என்றாள் மூச்சு வாங்க.

"ரேவதி! உன் அன்பையும், மாற்றத்தையும், நான் பூரணமாக நம்பவில்லை. எங்கே மாறிவிடுமோ? என்ற எண்ணம்தான் எனக்கு. ஆனால் ரகுவிற்காக, நீ மந்திரத்தை ஏற்றுக்கொண்டு, நம் குடும்பப் பூசல்களைக் காப்பாற்றிய இந்தச் செய்கையைப் பார்த்தபிறகுதான் உன் மனதைப் புரிந்துகொண்டேன்."

"ஐயோ......சித்தி...... ரகுவிற்காகதான் அவர் வந்தாரா? பின் ஏதோ என்று நினைத்து....நான்..."

"ரகுவிற்காகவும் இல்லை ரேவதி....இந்த 'நியூஸ் புலடன்' வேலை. ரகு தோட்டத்தில் படுத்திருந்தானே"

"ஆமாம்"

'அதன் காரணம் என்ன? என்றாள். ரகு எங்கேயோ பயந்துகொண்டானும் என்று வாக்கியத்தை நான் முடிப்பதற்குள் மந்திரக்காரரை அழைத்து வருகிறேன் என்று இந்த தந்திரக்காரி ஓடிவிட்டாள். இவள் பின் ஓடுவேனா? ரகுவின் அருகில் இருப்பேனா? என்ன செய்வேன் ரேவதி. நான் தவித்துக்கொண்டிருந்தேன். நல்ல வேளை உன் சமயோசித புத்திதான், நம்மை அம்பலத்தில் இழுத்துவிடாது, அந்தக் கிழவனைத் தொலைத்தது........"

"இப்போது தொலைத்துவிட்டது ஒருபுறமிருக்கட்டும். இனிமேல் நம் வீட்டுப்பக்கம் வராதிருக்க தாம்பூலத்தோடு இரண்டு ரூபாயையும்வைத்து, கூறியும் அனுப்பிவிட்டேன்".

"ரேவதி! ரஞ்சன் வருவதற்குள் நம் குடும்பம் இருந்த இடம் தெரியாது பாழாகிவிடுமோ? என்று வருந்திகொண்டிருந்தேன். உன்செய்கைகள் என் வருத்தத்தைப் போக்கி ரஞ்சன் திரும்புவதற்குள் நம் வீடு புதுமணத்தோடு விளங்கும் என்ற நம்பிக்கையும் பிறக்கிறது ரேவதி." ரேவதி தலை குனிந்தாள். "சரோ...இனி இம்மாதிரியான வேலைகளைச் செய்யாதே. நீதான் ரஞ்சனின் தங்கையாயிற்றே. அப்படியிருக்கையில் இப்படி செய்யலாமா?"வழக்கம்போல் சரோஜா திட்டவும் இல்லை, முணுமுணுக்கவும் இல்லை. பதிலாக அழத் தொடங்கினாள். "நான்...ரகுவிற்கு என்று அவரிடம் எங்கு சொன்னேன்? எங்கள் வீட்டில் என்று தான்..." என்றாள் கேவல்களுக்கிடையில்.

ரேவதி துள்ளினள். "சித்தி! பேரைக் கூறவில்லை யாம். கலக்கத்தின் நடுவில் இது ஒரு களிப்புதான் சித்தி! சரோ! உன்னை என்ன சொன்னேம் என்று அழுகிருய்? சமர்த்தில்லையா நீ?" என்று சரோஜாவின் கண்ணீரைத் துடைத்தாள் ரேவதியின் ஸ்பரிசம் பட்டாலே ஒதுங்கும் சரோஜாவும் சாந்தமாக நின்றிருந்தாள்.

இச்சம்பவம் நடந்ததுமுதல் லக்ஷ்மிக்கு 'ஆனந்த பவன'த்திலிருக்கும் ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாகக் கழிந்தது. நரக வேதனையாக இருந்தது. ஒரே பிடியாக நின்று, சதாசிவத்தின் அனுமதி பெற்று, தன் தம்பிக்கு தங்கள் வருகையைப்பற்றி கடிதமும் எழுதி போட்டுவிட்டாள். வாஸு, சரோஜாவிற்கு ரேவதியைத்துணையாகவும், அவர்களைக் கவனித்துக்கொள்ள பார்வதியையும் வைத்துவிட்டு ரகுவுடன் கிளம்பி சென்றேவிட்டாள்.

நிமிடத்திற்கு நிமிடம் வேதனையால் உதைத்துக் கொண்டிருந்த அவள் உள்ளம் தன் தம்பிவீட்டிற்கு சென்றிறங்கியதும் சற்று அடங்கியது. ஆனல் ரகு முன்போல் கிலியின் ஆட்டத்திற்கு வசப்படாது இருக்கவேண்டுமே என்று அவள் மனம் போராடிக்கொண்டிருந்தது.

நெடு நாளாக சந்தித்திராத உறவினர்களைக் கண்டதும் லக்ஷ்மியின் துயரமே மறைந்ததுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. மனம்விட்டு, சிரித்த முகத்துடன், தன் அண்ணி, அவள் மகள்—அதாவது தனது வருங்கால மருமகள்—இருவருடனும் நீண்டநேரம் பேசினள். தன் வீட்டில் இந்த சிறு வயதிலேயே ரேவதியும், ரகுவும், சரோஜாவும், வாஸுவும் ஒற்றுமை இல்லாது மனக்கசப்போடு இருந்ததையும், ரஞ்சன் ஒன்றிலும் ஒட்டாதுபோல் விலகியிருந்ததையும் நினைத்து உருகியவளுக்கு, இங்கு தம்பி பாஸ்கரனும் அவன் மனேவியும், அண்ணியோடும், குழந்தைகளோடும், கூட்டுக் குடும்பமாக மன நிறைவோடு வாழ்வதைப் பார்த்ததும் மகிழ்ச்சிப் பொங்கியது. அவர்களோடு எல்லா விஷயங்களிலும் லக்ஷ்மி பகிர்ந்து கொண்டாள்.

"தம்பி! என்மருமகள் என்ன எதிரில் வராமல் ஒளிந்து கொண்டு போகிருள். அவள்தான் ரகுவிற்கு சரியான சகா. நான் ஊர் திரும்பியபிறகு சலமும் அவள்தான்". —குறும்பாகக் கேட்டாள் லக்ஷ்மி.

"போ.........அத்தை" உடம்பை நெளித்தாள் அவள்.

"ரகு...அதோ பார் உன் மனேவி" என்று பொடிப் பயல்களும் கலந்துகொண்டனர்.

முதல் இரண்டு நாட்கள் ரகு எதிலும் சேர்ந்துகொள்ளாது விடேதியாக விலகியிருந்தான். குளுகுளுவென்று குழந்தைகளும், அவர்களது மழலைச் சொற்களும் அவன் செவிகளில் படபட அவன் கிலி சிறிது ஒதுங்கி, அவன் மனதை அசைந்து கொடுக்கலாயிற்று. "சு... இங்கே வா ...உன் பெயர் என்ன? நீ என்ன படிக்கிறாய்" என்று கேட்க முற்பட்டான்.

ஒருவரும் அருகில் இல்லாத சமயம் லக்ஷ்மி ரகுவிற்கு உபதேசம் செய்வாள். "ரகு! பழைய எண்ணங்களையும் பயத்தையும் மறந்துவிடு இந்த ஊரில் உன் சிநேகிதர்களும் கிடையாது. விரோதிகளும் இல்லை. உன் இஷ்டப்படி இருக்கலாம். குழந்தைகளோடு வேடிக்கைபாய்பேசு. ராதா வேற்று மனுஷியல்ல. உன மனைவியாகப்போகிறவள். அவளோடு வித்யாசமின்றி பழகு. அவர்கள் எதிரில் எதுவும் உளறாதே. கத்தாதே."—இப்படிப் பல போதனைகள்.

ரகு தலையைமட்டும் ஆட்டுவதோடு நில்லாமல், அதைக் கூடியவரையில் கடைப்பிடிக்கவும் செய்தான். லக்ஷ்மி ராதாவைத் தனியே அழைத்து "நீ ரகுவிடம் பழகாது பேசாது இருக்காதே. யாரும் கேலி செய்யமாட்டார்கள். நீங்கள் எல்லோரும் சேர்ந்துதான், முக்யமாக நீதான் அவன் பயத்தைப் போக்கவேண்டும்." என்று அவளையும் வேண்டும் முறையில் ஊக்கினாள்.

"என் அத்தை! எங்கு பயந்துகொண்டார்?"

"அண்ணி, தம்பி யாரும் சொல்லவில்லையா! சிநேகிதர்களோடு அடிக்கடி செல்வதுபோல் உல்லாசமாகச் சென்ற இடத்தில் பயந்துகொண்டிருக்கிறான். என்ன என்று அவனுக்கே புரியவில்லையம்மா. பழைய விஷயங்களைப் பற்றி பேச்சே எடுக்காமல் திருப்பவேண்டும். உன் அப்பா சொன்னபடி அவருக்கு சாந்தி கொடுக்க உனக்கும், ரகுவிற்கும் திருமணம் செய்து பார்த்துவிட்டால் போதும்மா. உன் பொறுப்பில் இப்போதே ரகுவை விட்டுவிட்டேன்" அவள் வார்த்தைகள் ராதாவின் நெஞ்சத்தை உருக்கிவிட்டன.

"அத்தை கவலைப்படாதீர்கள். என் முயற்சியை நான் பரிபூரணமாக எடுத்துக்கொள்கிறேன். கடவுள் கிருபையும் சேர்ந்தால் பலன் ஏன் கிட்டாது?" லக்ஷ்மியைப் பல விதத்தில் அவள் தேற்றினாள்.

ராதாவின் முக்கியமான பொழுதுபோக்கில் சங்கீதமே முதன்மையானது. யாழ்போன்ற அவள் குரலும், தம்பூ

ராவின் ஸ்ருதியும் வித்தியாசமே தெரியாதவாறு இழைந்திருக்கும். தினந்தோறும் சுமார் ஒருமணி நேரமாவது கட்டாயமாகப் பாடுவாள். லக்ஷ்மியும், பாஸ்கரனும் அவன்,



மனைவியும் அமர்ந்து கேட்டனர். ரகுவும் லக்ஷ்மியோடு அமர்ந்து வாயைப் பிளந்தவாறு அவ்வின்னிசைக் கானத்தில் லயித்துவிட்டான். பாடி முடித்து எல்லோரும் எழுந்தபிறகும் அப்படியே ராதையைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான்.

ரகுவிற்கு பாட்டு என்றால் மிகவும் ஆசை. அவனுக்குக் கர்நாடக சங்கீதத்தின், முறையும் நுணுக்கமும் தெரியாதே தவிர அதை நன்றாக ரசிப்பான். அவன் வாயும் அவ்வப்போது சினிமா மெட்டுகளை இழுத்துக்கொண்டிருக்கும். தினந்தோறும் மாலையில் யார் வந்தாலும் வராவிட்டாலும், முதலில் அவன் வந்து அமர்ந்துவிடுவான். ஒருநாள் பாடாவிட்டால் "அம்மா! இன்று ஏன் பாடவில்லை" என்று கவனித்துக் கேட்பான். பேசாமடந்தையாய் இல்லாது அவன் பேசத் தொடங்கியதே லக்ஷ்மியை வானத்தில் தூக்கிச் செல்வது போலிருந்தது.

"இந்த ஊரிற்கு வந்து எங்கும் வெளியில் போகவில்லையே. நீ வரமாட்டாயா அம்மா"—இப்படி கேட்டுவிட்ட

தும், காத்திருந்தவள்போல் லக்ஷ்மி அன்று மாலையே கிளம்பினாள். நடுப்பகலிலும் கிளம்ப அவள் தயார்தான். ஆனால் மற்றவர்கள் வருவார்களா?

வெளியில் செல்லும்போதும், வீட்டிலே பழகும்போதும் ராதாவிடம் பேச அநேக சந்தர்ப்பங்கள் வாய்த்தன. அவளும்தான் வலியவந்து பேசினாள். ரகு மற்றவர்களை விட அவளிடம் அதிகம் பழகத் தொடங்கினான். மற்றவர்கள் பழகச் செய்தனர் என்றால் அதுவே மிகப் பொருந்தும்.

ராதா பாட்டோடு, பேச்சிலும் கெட்டிக்காரி. "ராதா! அந்தப் பாட்டு பாடு. இதைப் பாடேன்" என்று ரகு கெஞ்சுவான். ராதா பிகு செய்துவிட்டு பாடுவாள். அவனது நிலைக்குத் தகுந்த பாடல்களைப் பாடி பிறகு அதன் அர்த்தத்தையும் விளக்குவாள். ரகுவின் மனதில் படியும் வரை விடமாட்டாள். ரகு பெரியவர்களுக்கு அடங்காமல் திரிந்த விஷயமும் இவளுக்குத் தெரிந்திருந்ததால், அப்படி இருந்தால் என்ன ஆகும், என்ன ஆயிற்று, எப்படி நடக்க வேண்டும் என்பதையெல்லாம் கதைகளாகக் கூறுவாள். ரகு அவற்றையெல்லாம், பல புத்தகங்களில் வந்து படித்த கதை என்று எண்ணுவான். ஆனால் அவைகளில் பாதிக்கு மேல், ராதாவின் கற்பனையாகவும், கதைகளிலிருந்தும், சொந்தமாகவும் சேர்க்கப்பட்ட கலப்படமாகவும் இருக்கும்.

லக்ஷ்மி, ராதாவின் சாமர்த்தியத்தையும், குணத்தையும் கண்டு பூரித்துப் போனாள். வீட்டுக் கவலைகள் ஒதுங்கி, ரகுவின் நடத்தையும் மனதிற்கு திருப்தியை அளித்ததால் தொல்லைகள் நீங்கி தன் உடல் பருத்துவிட்டதுபோல் ஒரு ப்ரமை. சற்றைக்கொருதரம் தன் கைகளையும், கால்களையும் பிடித்து பார்த்துக்கொண்டாள்.

ரகுவின் மனமும் இவர்களோடு ஒட்டிப்போவதை அறிந்து தான் ஊர் திரும்பலாமா என்ற யோசனையோடு "ரகு உனக்கு ராதா அகப்பட்டுவிட்டாளே. இனி எங்களையெல்லாம் நினைக்க உனக்கு நேரமேது? பாஸ்கர் மாமா, மாமி, அண்ணி எல்லோரும் இருப்பதால் நான் ஊருக்குப் போகட்டுமா?" என்றாள்.

"நம் ஊரிற்கா அம்மா!" முதலில் தயங்கினாலும் "வாஸுவை சரோஜாவையும் அழைத்துகொண்டு வந்துவிடம்மா" என்றான்.

"ரேவதியை அனுப்பிவைக்கிறேன். பள்ளிப் பரீக்ஷை முடிந்ததும் விடுமுறையில் குழந்தைகளோடு வருகிறேன்."

ரகு குறையின்றி விடை கொடுத்தான்.

தன் உடன் பிறந்தவர்கள் வீடாயிருந்தாலும் ரகுவைத் தனியேவிட அவள் துணியவில்லை. ரகு சிறிது சிறிதாகத் திருந்திவிட்டாலும் இயற்கையாக இறந்தகால நினைவுகள் மீண்டும் வந்து, மறைத்து வைக்கும் விஷயத்தை உடைத்து விட்டால்?... இந்த கேள்வி எழவே ரேவதியை, ரகுவிடம் கூறியபடியே தான் சென்ற மறு வண்டியில் அனுப்பி விட்டாள்.

ரேவதிக்கு வேற்று மனிதர்கள் என்று முதலில் சிறிது வெட்கமாய் இருந்தாலும் ரகு இருப்பதால் அவ்வள வாக மேலோங்கவில்லை. ராதாவும் அங்குள்ளவர்களும் அன்பைச் சொறிந்தார்கள். ரகு கருப்பஞ்சேரியில் இருந் ததைவிட தெளிந்து காணப்பட்டதைக் கண்டதும் வியப் பாயிருந்தது.

தன் வீட்டைப் பற்றியோ, தங்கைத் தம்பியைப் பற் றியோ பேசவேயில்லை. பாட்டிலும் கதையிலுமே மிதந்து கொண்டிருந்தான். லக்ஷ்மி இருந்தபோது அவள் பெரிய வர்களுடனேயே அதிக நேரத்தைக் கழித்ததால் அவள் இருப்பதாகவேத் தெரியவில்லை. ரேவதிக்கு ஏற்ற தோழி ராதாவாகையால் இப்போதெல்லாம் அம்மூவரும் சேர்ந்து காணப்பட்டனர். ரேவதியோடும், ராதாவோடும் வித்தியாச மின்றி பேசினுன்.

"ரேவதி! ராதா எப்படி பாடுகிருள் பார்த்தாயா? நீயும் அவளிடம் நிறைய பாட்டுகள் கற்றுக்கொள்ளேன்" என் ருன் ஒருதினம்.

"ஓ! அதற்கென்ன ரகு. தாராளமாய். நீதான் சிபார்சு செய்து எனக்குக் கற்றுவைக்க வேண்டும்."

"ஏன் ரேவதி! நீ கேட்டால் மறுப்பாளா....சை அப் படி நினைக்காதே. ராதா நல்லவள்"

"ஊம்.........ராதா நல்லவளா எனக்குத் தெரியாதே. போ ரகு. நீதான் கூறவேண்டும். எனக்குத் தம்பியின் வருங்கால மனைவி என்ற சொந்தம் இருந்தாலும், உனக்கு மனைவி என்கிற உரிமையும், மாமாவின் பெண் என்ற கார ணமும் சேரவில்லையா?" என்று அவனது எண்ணம் மேன் மேலும் ராதையின்பால் விழும்படி திருப்பி, ஆசைக்கனலை ஊதிவிட்டாள்.

அந்த சமயம் ராதாவே, "எனக்கு யாருடைய சிபார் சுக் கடிதமும், முகஸ்துதி சொற்பொழிவும் தேவையே யில்லை. வா ரேவதி நான் சொல்லித் தருகிறேன். வேண்டு

மானல் உன் தம்பியையும் கற்றுக்கொள்ளச் சொல்" என்று ரேவதியை அணைத்தவாறு கூறினாள்.

ரேவதி தன்னையும் மறந்து "ராதா...ராதா" என்றாள். அவள் குரல் தழுதழுத்தது. அச்சமயம் அவள் உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சிகள்தான் எவ்வகைப் பட்டதோ?

தன் சித்தியின் உறவினர்கள்தானே, தனக்கென்ன நேரிடை உறவு இவர்கள் என்று நினைத்திருந்த ரேவதியின் மனம் பழகிய நாட்களில் தன் சித்தியைவிட, அவர்களுக்கு அதிக மதிப்பையும் அன்பையும் அளித்துவிட்டது. தன் வீட்டிலும், தனிமையில் கருப்பஞ்சேரியிலும் அநுபவித்த, கிடைத்த நிம்மதியைவிட, பன்மடங்கு நிம்மதியும், அதோடு சந்தோஷமும் இவ்விடத்தில் கலந்து கிடைத்தது என்ன காரணத்தால் என்பது அவளுக்கே புரியவில்லை. 'இங்கு ராதா இருப்பதாலா?.... ஏன் கருப்பஞ்சேரியில் உமா என்னுடனிருக்கவில்லையா?.... நம் ஊரில் எண்ணற்ற சிநேகிதிகள்!' என்னவோ அவள் மனம் குளிர்ந்திருந்தது.

ரகு, சென்ற விஷயங்களை மனதிலும் நினைப்பதில்லை. தன் சிநேகிதர்களைப் பற்றியும், தன் கடந்தகால செயல்களைப் பற்றியும் நினைக்கும் நெஞ்சிற்கு சமாதி கட்டிவிட்டானு? முன்பெல்லாம் லக்ஷ்மி விழுந்து வேண்டியதின் பலன் இப்போதுதான் கிட்டுகிறதோ? லக்ஷ்மி ஊர்சென்று ரேவதியின் நடமாட்டம் தன் கண்ணெதிரில் ஏற்பட்ட பின், தன் உடன்பிறந்தவர்களின், எண்ணம் அவன் சிந்தனையைக் கிளரத் தொடங்கியது.

"ரேவதி! வாஸுவும், சரோவும் எப்படி இருக்கிருர்கள். என்மேல் சரோவிற்குக் கோபமா?" என்று கேட்டான்.

"ஏன் ரகு! உன்மீது அவளுக்கு எதற்குக் கோபம்? கடந்தவற்றை நினைப்பதில் என்ன பயன்? நாங்கள் எல்லோரும்—சரோ உள்பட—பழைய குப்பைகளையெல்லாம் கொளுத்திவிட்டோம். யாருக்கும் உன்மீது கோபம் கிடையாது. நீ இப்போதெல்லாம் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்து எல்லோருக்கும் மகிழ்ச்சிதான்."

"ரேவதி! என் நிலை எனக்குப் புரிகிறது. நீ சொல்வதெல்லாம் உண்மையா? என்மீது வெறுப்பில்லையா? கோபமில்லையா?"

"இல்லை ரகு....ஒன்றுமில்லை. ஆனல் ஒருவருக்கு உன் மீது கோபம் பொத்துக்கொண்டு வருகிறது."

"கோபமா?....யாருக்கு? "சொல்...

"யாருக்கா... இதோ இவளுக்குதான், இந்த ராதைக்கு தான், அவள் பாவம் தன் அலுவல்களையெல்லாம் ஒதுக்கி விட்டு உன்னோடு பேச ஆவலாய் வந்திருக்கையில், நீ என் னோடு கோபம், தாபம் என்று அளந்துகொண்டிருந்தால்.... கோபமிருக்காதா? பாவம்.........." என்று கண்ணைச் சிமிட் டினாள்.

"கேலியைப் பார்....என் கோபத்தையும், சாந்தத்தை யும் உள் புகுந்து பார்த்துவிட்டாற்போல் பேசுகிறீர்களே. ம் ..எனக்கும் உங்களை இப்படி கேலி செய்ய காலம் வரும். அப்போது ஒருகை பார்த்துக்கொள்கிறேன்" என்று மந்த காசம் துள்ள கூறினாள் ராதா.

"ராதா! ஒரு கை என்ன? ராவணன்போல் இருபது கையால் வேண்டுமானால் பார்த்துக்கொள். பிறகு ஒன்று. உனக்கு நான் எத்தனை தடவை கூறுவது? நான் என்ன பெரிய பாட்டியா? வாருங்கள், உங்களை என்றெல்லாம் மரி யாதை வைத்துப் பேசாதே. சகஜமாகக் கூப்பிடு" என்று வேண்டினாள்.

"அதெல்லாம் எனக்குத் தெரியும். என்னைவிட வய தில் நீங்கள் பெரியவர் என்பது ஞாபகமிருக்கட்டும்"

"ஹஉம்....அப்படியா! சரி நான் எதற்கு இங்கே பூஜை வேளையில் கரடிபோல்?" என்றவாறு மற்றொரு அறைக்கு வந்தாள்.

"வீண்பொழுது கடத்துவானேன். சித்திக்குக் கடித மாவது எழுதலாம்" என அமர்ந்தாள். முன்பு பொழுதை வீணாக்குவதே காரியமாக இருந்தவளுக்கு, இப்பொழுது நேரத்தைப் பிடித்து வைத்துக்கொள்வதே வேலையாக அமைந்தது.

"அன்புள்ள சித்திக்கு,

அநேக நமஸ்காரங்கள். தங்கள் நலமறிய ஆவல். என் கடிதங்களெல்லாம் தவறாமல் கிடைத் துக் கொண்டிருப்பதுபற்றி மெத்த சந்தோஷம். ரஞ்சனிடமிருந்து கடிதங்கள் வந்துகொண்டிருக் கின்றனவா? எங்கள் பெயருக்கு ரஞ்சனிடமி ருந்து வரும் கடிதங்களை தவறாமல் அனுப்பி விடுங்கள். ரகுவும் ஆவலாக இருக்கிறான்.

சித்தீ! எனக்கு நம் ஊரிலும், கருப்பஞ்சேரியி லும் இருந்ததைவிட பன்மடங்கு உற்சாகம் இவ் வூரில் பெருகுகிறது. காரணம் எனக்கே புரிய வில்லை. பாஸ்கர் மாமா நம் வீட்டிற்கு வரும்போ தெல்லாம் நான் அவ்வளவாக அவரோடு பழகிய

தில்லை.நான் பழகுவதற்கு அவர் வரும் சமயம் வீட்டிலிருந்தால்தானே சந்தர்ப்பம் ஏற்படும்? மேலும் மேலும் புத்திமதி கூறுவதால் அவர்களிடமெல்லாம் எனக்கு வெறுப்புதானே அப்போது மூடிகிடந்தது. இப்போது பழகுவதில் எல்லோருடைய குணங்களும் எனக்கு தெள்ளென விளங்குகிறது. என்மீது எவ்வளவு அன்பாக இருக்கிறார்கள் என்பதைக் கூறியே முடியாது. ஒருவரைப் போல் ஒருவர் இப்படி நல்லவர்களாக இருப்பது நூற்றில் ஒரு இடத்தில்கூட கிடையாது. ரகுவும் ராதாவின் சாமர்த்தியத்தினால் மிகவும் தேறியிருப்பதைக் கண்டு ஆச்சரியம் தாங்கவில்லை எனக்கு.

ராதாவின் அறிவுத் திறமையையும், குணங்களையும் நீங்கள் இங்கிருந்தபோது நேரில் கண்டிருப்பீர்கள். இருந்தும், என்னால் கூறாது இருக்க முடியவில்லை. ரகுவோடு விஷயங்களை விவரித்தும், ஆனால் ரகுவிற்கு குழம்பாமலும், புத்திமதியாகவும், இருக்கும்படி ஒரு வாக்கியம் அமைத்து பேசுகிறாள். ரகு புரிந்து, விவரமாக அறிந்தும் கொள்கிறான் என்றுதான் நினைக்கிறேன். முன்போல் அவன் இல்லை. மாறிவிட்டான் என்பதை எத்தனை தடவைவேண்டுமானாலும் நான் கூறுவேன். அவள் பேச்சே இனிக்க இனிக்க இருக்கிறது. ரகு—ஏன் நானும்தான்—அவள் கானத்தில் மயங்கியேவிட்டோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவள் குணம்—நடத்தை—பூஜை செய்யலாம் சித்தி! நான் என்ன பெரிய மனுஷி. என்னைக்கூட ராதா "வாருங்கள் ....போங்கள்" என்று மரியாதையுடன் அழைக்கிறாள். அவள் குரலில் ஒலிக்கும், சாந்தமும், குழைவும், பரிவும் எழுத்தால் எழுத முடியவில்லையே. ரகுவை மட்டும் திருப்பவில்லை. என்னையும் அவள் திருப்பிவிட்டாள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளும் தொனியோடு, நம் வீட்டு சம்பாஷணைகளையும், நினைத்து ஒப்பிட்டுப் பார்த்தால்... அடேயப்பா...என்ன வித்தியாசம். சித்தி! உங்களை மரியாதை வைத்து இக்கடிதத்தில் எழுதியிருப்பதுபற்றி வியப்படைய வேண்டாம், எல்லாம் ராதாவிடமிருந்து கற்றறிந்த பாடங்கள். அவள் இசை மட்டும் கற்பிக்கவில்லை. ஒழுக்கத்தையும் புகுத்திவிட்டாள். நான் எழுதுவதெல்

லாம், போலியாக அல்ல. நான் உண்மையில், என் மனதறிய திருந்திவிட்டேன்.

என் தவறுகளை எண்ணி வாடுகிறேன். நாமும் ஏன் முதலிலிருந்து ராதாவைப் போலிருந்து நல்ல பெயர் எடுத்திருக்கக்கூடாது என்று தோன்றுகிறது. தோன்றி என்ன பயன். இனியாவது இப்போது தலை எடுத்திருக்கும் இக்குணம் மறைந்து போகாது, நல்வழி காட்டவேண்டும். சித்தி! என் வரையிலே எழுதிக்கொண்டு போகிறேன். ரகு முன்னேற்றத்தைக் கவனித்து சீக்கிரத்திலேயே மகிழ்ச்சியுடன் ஊர் திரும்பலாம் என்ற எண்ணம் துளிர் விட்டுவிட்டது. வேண்டுமானால் ராதாவையும் அழைத்து வரலாம். நானும் ரகுவும், வாஸு, சரோ எல்லோரையும் விசாரித்ததாகச் சொல்லுங்கள்.

உங்கள் அருமைப் புதல்வி
ரேவதி''

கடிதம் நீண்டுவிட்டாலும், அவள் அறிவும், எண்ணமும் நீண்டு, விரிந்து ஆனந்தத்தையும், புத்துணர்ச்சியையும் அளித்துவிட்டதுபோல் அவள் எண்ணி அகமகிழ்ந்தாள்.

அத்தியாயம் 21

பயங்கரச் சூழலும், வியந்திடும் செயலும்.

ரகு கட்டிலில் படுத்தவாறு ஏதோ ஒரு நாவலை படிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். ராதாவும் அவ்வரையிலேயே ஒரு மூலையில் அமர்ந்துஏதோ குப்பைகளைக் கிளறிக்கொண்டிருந்தாள். ஆனால் ரேவதி நிமிடத்திற்கொருமுறை உள்ளுக்கும் வெளியிற்கும் நடந்தவாறிருந்தாள். வாயிலில் சென்று எட்டி எட்டிப்பார்த்து, அவள் கழுத்து விட்டுப் போகும்படி ஆகிவிட்டது. கண்ணும் பூத்துவிட்டது. வெறுப்புடன் தன்னையும் மீறிய சலிப்புடன் வாயிற் திண்ணையிலேயே அமர்ந்தாள்.

பாவம்! ரேவதி எதற்காக இப்படி நடக்கவேண்டும்? இளைப்பாறவேண்டும்? தலையை சுவற்றில் முட்டுகொடுத்தவாறு தன்னையே தான் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினாள். ''நாம் கடிதம்போட்டு இரண்டு வாரத்திற்குமேல் ஆகிறது. நமது நீண்ட கடிதத்திற்கு பதிலை எதிர்பார்த்து ஒவ்வொரு தபாலிலும் ஏமாற்றமே ஏற்படுகிறதே! வாஸுவும்,

சரோஜாவும் கடிதம் எழுதிக்கொண்டிருப்பதால், வேறு விசேஷமில்லை என்பது தெரிகிறது. பின் ஏன் சித்தி எழுதவில்லை? உடம்பிற்கு ஏதாவது அசௌக்கியமா? ஏன் என் மனது குழம்புகிறது? சதாசிவத் தாத்தாவும் பதில் போடவில்லையே?'' சோர்ந்திருக்கும் அவள்மனம் பதிலிருக்கத் தெரியாமல் குழம்பியது. தன் அருகில் ஏதோ 'டப்' என்ற ஓசையுடன் விழுந்ததை அறிந்ததும் திடுக்கிட்டு எழுந்து நின்ருள். தபால்தான்!

ஓடிச்சென்று அதை எடுத்து வந்தாள். தன் பெயரிற்கு! அட சித்தியிடமிருந்துதான். அங்கேயே அமர்ந்தாள்.

அக் கடிதத்தில் கண்டிருந்தது:—

......'உன் கடிதம் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். ரகுவின் நிலையைக் கேட்டதும் சந்தோஷம் துள்ள வைத்துவிட்டது. நீ கடிதம் எழுதி பல நாட்கள் ஓடியும் என்னல் பதில் எழுத முடியவில்லை. சந்தர்ப்பம் அப்படி அமைந்துவிட்டது. வாஸு, சரோ கடிதமெழுதிக்கொண்டிருப்பதால் அதைக் கண்டு நீ ஆறுதல் அடைவாய், கஷ்டப்படமாட்டாய் என்று நான் நினைத்தேன். அதற்குள் நீ பல கடிதங்கள் எழுதிவிட்டாய். உன் நிம்மதிக்காக, ப்ரயத்தனத்துடன்தான் இக் கடிதம் எழுதுகிறேன். அடுத்து வரும் என் நீண்ட கடிதத்தில் எல்லா விஷயங்களையும் விவரமாய் எழுதுகிறேன்''....

இவ்வளவே கண்டிருந்தது. "என்ன இது? உப்புசப்பில்லாமல் இப்படி துண்டு கடிதம்போல் எழுதியிருக்கிருள் சித்தி. 'சந்தர்ப்பம் அப்படி அமைந்துவிட்டது?'... இதற்கு பொருள் என்ன? நீண்ட கடிதம் பின்னல் வருமாம். அதில் படித்து அறிந்துகொள்ளலாம்'' என்றவாறு உள்ளே சென்ருள். அவளையும் அறியாது உரக்கவே இவ்வார்த்தைகளைப் பேசிவிட்டாள்.

"என்ன ரேவதி! என்னை கேலி செய்துகொண்டிருந்த நீயே என்னவோ பேசிக்கொண்டு வருகிருயே என்ன அது கையில்'' என்று ரகு வழி மறித்தவுடன் "...அ...இல்லை ரகு இதுவா சித்தியிடமிருந்து கடிதம்..." என்ருள்.

"பாவம் நடையாக நடந்தாயே... இன்றுதான் பதில் வந்ததா? என்ன விஷயம்?''

"ஒன்றுமில்லை... நீ சௌக்கியம்...நான் சௌக்கியம் ...ரகு, ராதா, மாமா, மாமி, ஆலு, தோலு, அவரைக்காய்

எல்லோரையும் விசாரித்ததாகச் சொல்லு...இவ்வளவு தான்''

"அட...ஆது, தோல்...அவரைக்காய்! அம்மாவிற்கு, தாவரங்களிடம்கூட எவ்வளவு அன்பு..''என்றான். "ஆமாம் ....போ'' என்று சித்தியிடமிருந்து பெரிய கடிதம் வராத கோபத்தை அவன்மீது வீசியவாறு சென்றுவிட்டாள். அன்று அவள் ராதாவின் இசையை சுவைக்கவும் இல்லை. வெளியில் செல்லவும் இல்லை. இதற்கே அவர்கள் "என்னம்மா! ஏன் இப்படி இருக்கிறாய். தலையை வலிக்கிறதா.. மருந்து சாப்பிடுகிறாயா?'' என்று உபசரிக்கத் தொடங்கிவிட்டனர். இதைக் கண்டதும் ரேவதி தன் மனதிலுள்ளதை வெளியில் காட்டிக்கொள்ளாது உலாவத் தொடங்கினாள்.

பின்னும் ஒரு வாரம் சென்ற பிறகே ரேவதி எதிர் நோக்கிய கடிதம் வந்து சேர்ந்தது. கடிதம் எழுதுவது என்றாலும், படிப்பதென்றாலும், கதை படிப்பதைபோல் தனி உற்சாகம். சந்தடி இல்லாத இடத்தில் தனிமையில் உட்கார்ந்துதான் எதையும் செய்வாள். அதே பழக்கப்படி தனி அறையில், போய் உட்கார்ந்து, நன்றாக சாய்ந்தவாறு படிக்கத் தொடங்கினாள். கடிதமும் தள்ளத்தள்ள விரிந்து கொண்டே போயிற்று.

"என் அருமைப் புதல்வி ரேவதிக்கு,

ஆசிகள். ரஞ்சனிடமிருந்து கடிதங்கள் வந்து கொண்டிருக்கிறது. அவன் நான்கு வருடப் படிப்பை இன்னும் சீக்கிரத்திலும் முடிக்க வசதி இருக்கிறதாம். அதன்படிதான் அவன் படித்துக் கொண்டிருக்கிறானாம். இப்பொழுதே இத்தனை மாதங்கள் ஓடிவிடவில்லையா? என்றுஎழுதியிருக்கிறான். அவன் சௌக்கியம் சிறிது சாந்தியை அளிக்கிறது.

ரேவதி! நீ எழுதிய கடிதத்தை நன்றாகப் படித்தேன். போனது போகட்டும். நீ எழுதியிருக்கும் விஷயங்களைப் படித்ததும் என் வாழ்க்கையே நிறைவு பெற்றுவிட்டதுபோல் ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. பெரியவர்களின் புண்ணியம், ராதா நமக்கு மருமகளாகக்கிடைக்கப் போகிறாள். அவள் அழகிற்கும், குணத்திற்கும், கலை ஞானத்திற்கும், சாமர்த்தியத்திற்கும் அவளை மணக்க எத்தனையோபேர் போட்டியிடுவார்கள். அவள் அதிர்ஷ்டத்தினால்தான் ரகு திருந்திவிட்

டானே!...புனர் ஜென்மம் எடுத்துவிட்டானே!... என்று நான் எண்ணுகிறேன். ஏதோ ஒன்று. மணமாகி வந்து மருமகள் வீட்டில் விளக்கேற்றி வைப்பது உலக வழக்கம். இவளோ வருவதற்கு முன்பே விளக்கேற்றி நம் வீட்டோடு, குலத்தை யும் ப்ரகாசமாக்கி வருகிருள். எத்தனை பெருமை நமக்கு!

'புயலுக்குப்பின் அமைதி'என்பது தொன்று தொட்டு வரும் ஒரு வாக்கு. அதன்படி நம் வீட் டிலும் உன் தந்தை இறந்ததுமுதல் தொடர்ந்து அடித்துக்கொண்டிருந்த புயல் ஓய்ந்து, இப்போது தான் அமைதி பெறத் தொடங்கியுள்ளது. என் மனதும் தெளிவுபெற முன்வந்தது: ஆனல்?..

ஆனல்?..என்ன ரேவதி. சென்ற கடிதத்தில் 'உனக்கு பதில் எழுத முடியாது சந்தர்ப்பம் அப் படி அமைந்துவிட்டது' என்று குறிப்பிட்டிருந்தே னல்லவா? சந்தர்ப்பம் என்ருல்..அந்த அசந்தர்ப் பத்தின் காரணம்?..அப்போது ஏற்பட்ட சங்க டத்தை விளக்குகிறேன்.

ஒரு நாள்—வள்ளி திடீரென்று வந்து நின் ருள். அவள் முகத்தில் நான் அப்படிப்பட்ட ஒரு கோரமான பரிதாபகரமான—களையை அதுவரை கண்டதேயில்லை. கணவனைப் பிரிந்த வருத்தம் என்று சாதாரணமாக வரவேற்றேன். ஆனல் அவள் கூறியவிஷயம்சாதாரணமாகவா இருந்தது? இடியையும் தாங்கலாம். ரேவதி!..இடியாவது மனி தனைக் கொன்று பூவுலகிலிருந்து விடுதலை செய்து நிம்மதி கொடுத்துவிடும். ஆனல் இந்தஇடி, உடலை யும், உயிரையும் சித்திரவதையல்லவா செய்கிறது?

வள்ளி எப்பொழுதும்போல் முத்துவைப் பார்க்கச் சிறைக்குச் சென்ருளாம். எப்போதும் ஒரு சிப்பாயுடன் அழைத்துப் போகச்சொல்லும் சிறை அதிகாரி அன்று 'மாரிமுத்துவா...அம்மா!' என்று கேட்டுவிட்டுத் தயங்கினராம். அவர் முகம் வாடி விட்டதாம். பிறகு 'அம்மா! நீ அவனைப் பார்க்க முடியாது. கைதிகள் வேலை செய்யும், போது இரண்டு மூன்று கைதிகளுக்குள் சண்டை ஏற்பட்டதாம். வாய்ச் சண்டை கைச் சண்டை யாக மாறி, ஆத்திரத்தில் அவர்கள் கையிலிருந்த ஆயுதங்களாலேயே அடித்துக்கொள்ளத் தொடங் கினர்களாம். எங்கோ தூரத்தில் தன் வேலையில்

ஈடுபட்டிருந்த மாரிமுத்து இதைக் கவனித்து ஓடி வந்தானும். சண்டையிடுபவர்கள் கையில், இரும்பு உலக்கையும், மண்வெட்டியும், கழியும் இருப்பதையும் மதிக்காது, அவர்களுக்கு காயம் ஏற்பட்டுவிடப் போகிறதே என்ற எண்ணத்துடன், நடுவில் புகுந்து அவர்களைத் தடுக்க முற்பட்டான். ஆனல் அந்த ஈவிரக்கமற்றவர்கள் 'நீயார் என்னைத் தடுக்க?' என்று இவனையே இரும்பு உலக்கையால் அடித்துவிட்டார்களாம்' என்ருராம்.

வள்ளி 'ஓ' என்று வீறிட்டாளாம். 'பொறு அம்மா! மேலும் சொல்கிறேன் கேள். ஆத்திரத்தில் தலைகால் தெரியாது அடித்துவிட்டதில், மாரிமுத்துவின் வலது புருவத்திலும், கண்ணிலும் பலமான அடி. அக்கண் இனி உபயோகமில்லையாம். பார்வை தெரியாது என்று டாக்டர் கூறிவிட்டார். அவன் சிகிச்சை பெற ஆஸ்பத்திரியில் இருக்கிருன். நீ இன்னும் இரண்டு நாட்கள் கழித்து வந்தால், அங்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்கிறேன்'

இச் செய்தியைக் கேட்டதும் வானமே இடிந்து தலையில் புரண்டதுபோல் வள்ளி தவித்தாளாம். தன் நிலை தெரியாது, தெருவெல்லாம் விழுந்து, எழுந்து ஓடி வந்து நம் வீட்டில் விழுந்து விட்டாள். ரேவதி! அவள் கூறும்போதே என்ஞல் கேட்கவே முடியவில்லை. இவ் விஷயத்தை உனக்கு எழுதுவதற்குள் நான் படும் அவஸ்தையைக் கூற முடியாது. கை பின்னுக்கிழுக்கின்றது. பேஞவோ கையில் பிடிபடாது வழுக்கி விழுகின்றது.

ம்... இதோடு நின்ருல் போதுமே....... பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும். என்ற பழமொழியை எந்த பெரியவர் செய்தாரோ அது நமக்கே நிதர்சனமாகிவிட்டது. இரண்டு நாட்கள் சென்று வள்ளியை வரச் சொன்ஞரல்லா... சிறை அதிகாரி? வள்ளி நம் வீட்டிலே தங்கி இருந்தாள். பிறகு சதாசிவமே வள்ளியை அழைத்துச் சென்ருர். ரேவதி! இந்த விஷயத்தை எப்படி எழுதுவேன்?... முத்துவிற்கு ஏற்கனவே ஒரு கண் கிடையாதாம். இப்போது போனது வலது கண்

தானே.... ஆனால் முன்னமேயே இடது கண்ணிற்கும் பார்வை யில்லையாம். இத்தனை வருடமாக வேலை செய்கிறானே முத்து, நமக்கு ஒருவருக்காவது இந்த விஷயம் தெரியுமா? டாக்டர்களை விசாரித்ததில்,பிறவியிலேயே அப்படி ஆகவில்லை, உண்மையான கண்ணை யெடுத்துவிட்டு, ஆட்டு முழியை வைத்திருக்கிறது என்று கூறுகிறார்கள்.

முத்துவை விசாரித்ததில் தனக்கொன்றும் தெரியாது என்கிறான். 'எனக்கு புத்தி தெரிந்து ஒன்றும் அப்படி நடக்கவில்லை' என்கிறான். பின் எப்படி மனித உடலில் ஆட்டு விழி வந்தது? ஒரே மர்மமாய் இருக்கிறது. இதை மர்மம் என்பதா? இல்லை மாயை என்பதா? வள்ளி வேண்டினாள். சதாசிவம் கெஞ்சினார். சிறை அதிகாரிகளும் டாக்டர்களும் நல்லபடியும், மிரட்டியும்கூட கேட்டுப் பார்த்தார்கள். 'எசமான்! எனக்கு தெரிந்து ஏதாவது என் கண்ணில் கோளாறு ஏற்பட்டு இருந்தால்தானே சொல்வதற்கு. என் வாக்கில் நம்பிக்கை இல்லையா' என்று நம்மையே கேட்கிறான்.

வள்ளியோ உருகி விட்டாள். சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் விழுந்து கிடந்தாள். என் மனம் பொறுக்கிறதா? எத்தனையோ சமாதானங்கள் கூறியும் அவளை சாப்பிட வைக்க முடியவில்லை. நம் வீட்டிலே இருக்கப் பிடிக்காது அல்லாடினாள். அவள் இருந்த நிலையைப் பார்த்தால் எங்கு தற்கொலை செய்துகொண்டு விடுவாளோ என்ற பயம்தான் உதித்தது. அதனால் தக்க ஆள் துணையுடன், சில நாள் கழித்து அவளை அண்ணன் வீட்டுற்கு அனுப்பி விட்டேன்.

ரேவதி! ஆட்டு விழியினால் ஏற்கனவே பார்வை யில்லாதது இடது கண், இந்த விபத்தினால் பறிபோனது வலது கண். ஆக....முத்து இரு கண்களும் பார்வை யில்லாத ஒரு அந்தகன். ஐயோ! என்னாலேயே அவ்வார்த்தையை நினைக்க முடியவில்லை... வள்ளி?...அவள் நெஞ்சு?...அவள் கதி?...நம் ரகு நேர்வழியில் இருந்திருந்தால்?... நான் அவனைப் பார்க்கச் சென்ற சமயம், நண்பனைக் குத்திய கத்தியுடனும், கற்றை பணத்துடனும், ரகு நில்லாதிருந்தால்?... முத்து ஏன் இக்

183215

கதிக்கு ஆளாகவேண்டும். நம் குடும்பம் சீர்பெற முத்துவின் சிறிய குடும்பம்—ஏழைக் குடும்பமல்லவா சிதறிவிட்டது?

நம்மால்— அதுவும் ரகுவால் அவன் கைதி என்ற பெயரைப் பெற்றதோடு, சிறையிலும் அவனுக்கு இயற்கையாய் அமைந்துள்ள நல்ல குணம் தலையெடுத்து, இந் நிலைக்குள்ளாக்கி விட்டதே. ரேவதி! உண்மையில் இச்சமயம் ரஞ்சன் இருந்திருந்தால் துடித்து போயிருப்பான். ஆனாலும் அவன் இருந்தால், இவ்வளவு கஷ்டம் எனக்கு, நம் குடும்பத்திற்கு ஏற்பட்டிருக்காது. என்ன படிப்பு வேண்டியிருக்கிறது.

ரேவதி! ரகுவிற்கு இவ்விஷயத்தைப் பற்றி மூச்சு விடாதே. உன்னோடு அடங்கிப் போகட்டும். தவம் கிடந்து குணமாகிற சமயத்தில் இவ்விஷயம் மறுபடியும் மூளையைக் கலக்கி விடுமோ என்று சந்தேகம். அதனால் இந்த அமளிகள் ஓயும் வரை நீங்கள் ஊர் திரும்ப வேண்டாம். சரோஜாவையே நான் வீட்டில் தங்கவிடாது அவ்வப்போது வெளியிலேயே துரத்திக் கொண்டிருக்கிறேன். மறுபடியும் சொல்கிறேன். ரகுவிற்குத் தெரியக் கூடாது. தெரிந்தால் அனர்த்தம். இக்கடிதத்தை எங்காவது மறைத்து வைத்து விடு. இல்லை, கிழித்து எறிந்து விடு. மற்றபடி குழந்தைகள் சௌக்கியம்.

லக்ஷ்மி''

ரேவதி ஆணி அடித்த மரம்போல் அமர்ந்துவிட்டாள். 'ஆ... இவ்வளவா நடந்துவிட்டது?... இத்தனை விஷயங்கள்... நம் குடும்பத்தின் உயிரே அடங்கியிருப்பதால்தான், சித்தி ரிஜிஸ்டர் செய்திருக்கிறாள். இந்த கடிதத்திற்கு எதற்கடா கையெழுத்த என்று நினைத்தேன். ஐயோ....முத்து ஒரு குருடனா....குருடனா... நம் ரகுவால்—நம் குடும்பத்தால், அவனது எஜமான விச்வாசத்திற்கு அளித்த பரிசா...நம் குடும்பத்தின் வேலைக்காரனாக இருந்ததற்கு, கண்ணைப் பறித்தது பரிசு...கைதி...கொலைகாரன்......என்ற பெயர்கள்தான் புகழ் பட்டம்' ரேவதி சிந்தனைக்குமுடிவில்லாது தொடர்ந்து கொண்டே போயிற்று.

"என்ன ரேவதி! சிந்தனையில் ஆழ்ந்து உலகத்தையே மறந்து விட்டாயே. அக் கடிதத்தின் விளைவா...அல்லது நீயாக ஏதாவது யோசிக்கிறாயா?"

"ஒன்றுமில்லை ரகு! ஏதோ..." என்று எழுந்தாள்.

"சரி...அம்மாவின் கடிதம்தானே. பெரியதாக—நிறை தாள்கள் கொண்ட கடிதம்...கொடு பார்க்கலாம்."

"வேண்டாம் ரகு...சித்தி எனக்கு எழுதிய கடிதம். நீ எப்படி படிக்கலாம்...முடியாது" என்று மறைத்துக்கொண்டாள். ரகு முறைப்போடு அறையின் மறுகோடிக்குச் சென்ருன். கலவரத்துடன் நின்றிருந்த அவளை "ரேவதி! சீக்கிரம் வாருங்கள். ஒன்று காட்டுகிறேன்" என்று பதில் கூறவும் விடாது அவளைப் பிடித்திழுத்துச் சென்ருள் ராதா. ஏற்கனவே கடிதத்தின் விளைவால் குழம்பியிருந்த அவள் மனம் ராதாவின் திடீர் தாக்குதலினுல் கலங்கி, சாதாரணக் கடிதங்களை வைக்கும் இடத்திலேயே இதையும் வைத்து விட்டு அவளோடு ஓடச் செய்தது.

சமயம் பார்த்துக் கொண்டிருந்த ரகு, கழுகுபோல் அக் கடிதத்தைக் கொத்திக் கொண்டு வேறு அறையில் மறைவான இடத்தில் ஒளிந்து கொண்டான். ரேவதி, ராதாவுடன் சென்ருளே தவிர, மனமெல்லாம் முத்துவையே நினைத்துக் கொண்டிருந்தது. ராதா காட்டிய அதிசயத்திலும் உள்ளம் செல்லவில்லை. இருந்தும் ராதா விடவில்லை. ரேவதியின் மனநிலை அவளுக்கு என்ன தெரியும்? "இன்று நம் வீட்டில் ஒரு புதிய பக்ஷணம் செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள்தான் முதலில் ருசி பார்த்து எப்படி இருக்கிறது என்று கூறவேண்டும்" என்ருள்.

"ராதா! எனக்கு இப்போது வேண்டாம் வற்புறுத்தாதே."

"ஏன் ரேவதி ஒரு மாதிரி இருக்கிறீர்கள். இன்று நான் செய்திருக்கிறேனல்லவா? ஹூம்...நீங்கள் சாப்பிட மறுங்கள்" என்ருள் குறையுடன்.

ரேவதி, 'என் முகம் எப்படியிருக்கிறது. உள்ளத்தின் ஓட்டம் முகத்தில் பாய்ந்து விட்டதா? ஐயோ...ஆபத்து.' என்றெண்ணி, முன்பொரு நாள் ஏற்பட்ட அனுபவத்தினுல் சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டு "ஓ நீ செய்ததா? அப்படி என்ருல் பசி இல்லாவிட்டாலும், பசி எடுத்து விடும் கொடு" என்று அமர்ந்தாள்.

புதிய பக்ஷணம், புது மெருகுடன் காட்சியளித்தது. வாயிற்போட்டதும் தேனய் இனித்தது. ஆனல் தொண்டையில் இறங்க மறுத்தது. அவள் நெஞ்சைதான் எத்தனையோ விஷயங்கள் அடைத்துக் கொண்டிருந்தனவே? இப்படியாக ராதா ஒவ்வொரு விஷயமாக ரேவதியை தனியே விடாது தொடர்ந்து கொண்டிருந்தாள். அவளும் தனிமை ஏற்படாதா? என்று ஏங்கி வரும்போது நேரம் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டாள்.

ஜன்னல் கம்பியில் முகத்தைப் பதித்துக் கொண்டு, தெருவை நோக்கிக் கொண்டிருந்த ரேவதியின் நயனங்களுக்கு தொலை தூரத்தில் ரகு சென்று கொண்டிருப்பது புலனுயிற்று! 'எங்கு செல்கிறான் ரகு? அவனுடனும் யாரும் போகவில்லையே? ஐயோ குழந்தைகளும் யாருமில்லையே அவனை அழைக்க? 'ரகு என்று கூவலாமா? யார் என்ன நினைப்பார்களோ' என்ற அச்சம் எழுந்து தடுத்தது. 'நமக்கு ஏன் எல்லாம் விபரீதமாகப் படுகிறது. அவன் சாதாரணமாகத்தான் எங்காவது வெளியில் சென்றிருப்பான்' என தன் மனதைத் தேற்றிக்கொண்டு படுக்கையில் விழுந்தாள் தன் முகம் யாருக்கும் தெரியாதவாறு தலையணையில் புதைத்துக் கொண்டாள்.

"ரேவதி...ரேவதி...எழுந்திரு" ஏதோ ஒரு குரல் அவசரமாக அழைத்தது. "ரகு" என கூவி விட்டாள் ரேவதி.

"ஸ்...என்ன இப்படி கத்துகிருய்...ரேவதி! நீ கடிதத்தைக் கொடுக்கமாட்டேன் என்றுதானே கூறிவிட்டாய்?"

"அதிருக்கட்டும்...நீ எங்கே போயிருந்தாய்?"

"நானு? எங்கு போனேன்?..."

"என்னையே கேட்கிருயா?... உண்மையைச் சொல் ரகு. நான் பார்த்தேன்... இந்தப் பக்கமாகச் சென்றுயே" என்று கையைக் காட்டினுள்.

"ஓ... கோவிலுக்குப் போனேன்..."

"வேறெங்கும்..."

"இல்லை ரேவதி."

"என்னையும் அழைத்துப் போவதுதானே?..."

"நீ ஏதோ காரியமாய் இருந்தாய்... வீண் பேச்சு எதற்கு? நீ கடிதத்தைக் காட்டாவிட்டாலும், நான் படித்து விட்டேன்...ரேவதி...எனக்..."

"என்ன! நீ படித்து விட்டாயா? ஆ...ரகு எனக்கு உலை வைத்து விட்டாயே. அது எப்படி உன் கையில்..." என்றவாறே ஓடிச் சென்றுள். "ஐயோ! பாவி...இங்கேயே... வைத்து விட்டேனே? ரகு உன்னைக் கெடுக்க முன்பு பல விதத்திலும் உடந்தையாய் இருந்தது போதாது...இப்போதும்" என்று விம்மத் தொடங்கினுள்.

"ரேவதி...நிறுத்து உன் அழுகையை...அம்மாவின் கடிதம் ஒரு எழுத்து விடாமல் என் மனதில் பதிந்துவிட்டது. என் மூளைக் குழம்பி விடும்...எனக்குப் பயித்தியம் பிடித்துவிடும்...அதனுல் கடிதத்தைக் காட்டாதே என்று அம்மா எழுதி யிருந்தாளே...அந்த பயத்தை அறவே ஒழித்துக் கட்டு. என் மூளைக் குழம்புமா? இனி இந்த ஜன்மத்தில் ஒருபோதும் அப்படி நடக்காது. நான் செய்த

அசுர வேலைகள் எல்லோர் மனதையும் புண்ணாக்கியது போதும்...மேலும் நான் புத்தி ஸ்திரமில்லாது அல்லாடி எல்லோரையும் துன்புறுத்த மாட்டேன். என் செய்கை மற்றவர்களுக்கு அதிர்ச்சி தரும். எனக்கே... தருமா? முத்துவிற்கு நான் இழைத்த தீங்கு போதாது என்பாவமே அவன் வாழ்க்கையில் குறுக்கிட்டு, அவன் கண்களையும் பறித்து குருடனாக்கி விட்டதே. முன்பொரு நாள் வள்ளி என்னைக் குத்த வருவதுபோல் கனவு கண்டேனே...அது பலித்தாலும் பலிக்கலாம். நானே சென்று அவள் கத்திக்கு கழுத்தை நீட்டுவேன். நம் குடும்பத்தில் குழந்தைகள் தீப ஸ்தம்பங்கள்போல் விளங்க வேண்டுமென தாத்தா தீப ஸ்தம்பம் ஏற்படுத்தினர். ஆனால் நானோ...அந்த ஜோதி எரிய உதவும் எண்ணெயாகக் கூட—ஏன்? அதைத் தாங்கி நிற்கும் ஸ்தம்பமாகக்கூட நான் விளங்கவில்லை. அணைக்கும் கருவியாக வந்துவிட்டேன். புனர் ஜென்மம் எடுத்து விட்டேன் ரேவதி! புனர் ஜென்மம். நாமும் ரஞ்சனைப் போல்—தீபத்தைப்போல்—ப்ரகாசிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் கொழுந்து விட்டெரிய தொடங்கி விட்டது. இனி அரைக்ஷணம் தாமதியேன். புறப்படு. இவ்வீட்டை விட்டு, இவ்வூரை விட்டு நம் ஆனந்த பவனத்திற்குச் செல்வோம்" என்று வீர கர்ஜனைபோல் முழங்கியது அவன் குரல். அவனது திரண்ட புஜங்களும் உடலும் பதறிக் கொண்டிருந்தது. அவனது குரூர விழிகள் ஒழிந்து, புதிய ஒளியுடன் விளங்கிய அக் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகிக் கொண்டிருந்தது.

"ரகு!" என்று கத்ததான் முடிந்தது ரேவதியால். ரகுவின் கையைப் பிடித்து அமரச் செய்தாள். சற்று நேரம் அவ்வறையை மௌனம் ஆட்கொண்டிருந்தது. இருவரிடையேயும் பெருமூச்சுகள்தான் பேசிக் கொண்டிருந்தன.

ரேவதி நிதானமானக் குரலில் தலையைக் கவிழ்ந்த வண்ணம், "ரகு! ஊருக்குப் போகலாமென்றாயே! சித்தி வர வேண்டாமென்று எழுதியிருப்பதோடு, திடீரெனக் கிளம்பினால் இவர்களுக்கு சந்தேகம் உண்டாகாதா? அங்கு போய்தான் நாம் என்ன செய்யமுடியும்?" என்றாள்.

"என்ன செய்வதா...அந்த கேள்வி பிறகு...வீணாக நீயே குழப்பிக் கொள்கிறாய்....இப்பொழுது நம் அப்பாவிற்கு தலை திவசம் வரவில்லையா?....ஒரு வருடம் ஓடி மறைந்துவிட்டதே ரேவதி. அந்தக் காரணத்தைக் கூறி புறப்பட்டுவிடலாம்."

"எனக்கு பயமாய் இருக்கிறது ரகு. சித்தி கோபிப்பாள். அந்த ஊரைப் பார்த்தும் உனக்கு...." என்று எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

"பழைய பல்லவியை விடு ரேவதி. என்மீது நம்பிக்கையில்லையா? நான் புறப்பட்டே தீருவேன். அதுவும் நாளையே. உம் ப்ரயாணத்திற்கு தயார் செய்யலாம் வா..." என்று அவளை பலவந்தமாக எழுப்பினான். ரேவதிக்கு தன்னைச் சுற்றி நடப்பவையே தெரியவில்லை. சித்தியின் ஆறுதல் மொழியையாவது கேட்கலாம். சித்திக்கு ஆறுதலும் கூறலாம் என்ற எண்ணமும் மறுபுறம் எழவே தங்கள் சாமான் என்று தோன்றியதையெல்லாம் பெட்டியில் அடைத்தாள்.

ரகு தன் மனதிலுள்ளதை முடித்தேத் தீரும் பிடிவாத குணமுள்ளவன். அதன்படியே எல்லோரையும் சரிதட்டி கிளம்பிவிட்டான். இச்சில மாதங்களிலேயே ரேவதியும், ராதாவும் இணைபிரியாது பழகிவிட்டதால், இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டுவிட்டனர். பிரிய மனதின்றி விடை பெற்றனர் ரகுவும் ரேவதியும்.

அத்தியாயம் 22

கலங்கிய நீரில் தெளிந்த ஊற்று

ஆனந்த பவனத்தின் நிலைப்படியில் நின்றிருந்த சதாசிவம், ரகு, ரேவதி பெட்டிப் படுக்கை சகிதம் இறங்குவதைக் கண்டு திகைத்துவிட்டார். "என்ன ரேவதி! முன்னறிவிப்பின்றி திடரென்று வந்திருக்கிறீர்கள்" என்றார். இருவரும் பதில் கூறவில்லை.

சரோஜாவின் அழைப்பின்பேரில் பின்புறமிருந்த லக்ஷ்மி அலையகுலைய ஓடி வந்தாள். "என்னடா! என்ன இது...யாருக்கும் உடம்பு அசௌக்கியமில்லையே" என்றாள். அவள் புருவம் கவலையடங்கிய கேள்விக் குறியாக உயர்ந்தது.

"ஏன் இப்படி.....பதறுகிறீர்கள்? யாருக்கும் ஒன்றுமில்லை. அப்பாவின் தலைதிவசம் வருகிறதில்லையா... அதற்காகப் புறப்பட்டு வந்தோம்" என்றான் ரகு நிதானமாக.

ரேவதியை அப்போதுதான் கவனித்தாள் லக்ஷ்மி. பலிபீடத்திற்கு செல்லும் ஆட்டின் நிலையைப் போல் இருந்தது அவள் நிற்பது.

"என்னப்பா ரகு! மாமா எல்லோரும் சௌக்கியமா? எப்படி இருந்தது ஊரெல்லாம்?"

"நன்றாக இருந்தது தாத்தா....உங்களை எல்லோரும் விசாரித்தார்கள். அவ்வூரிலும் உங்களுக்கு நல்ல மதிப்பு... தாத்தா! எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும். நான் முத்துவைப் பார்க்க வேண்டும் தாத்தா!"

முத்துவிற்கு கண்போன விஷயம் ரகுவிற்குத் தெரியாது என்று எண்ணிக்கொண்டு சதாசிவத்திற்கு முன் "வேண்டாம் ரகு....அங்கெல்லாம் நீ போகக்கூடாது. எல்லோரையும் விடமாட்டார்கள். அடிக்கடி போகக்கூடாது. இந்த வாரம்தான் முரளி போய் வந்தான்" என்றாள். சதாசிவமும் குறிப்பறிந்து "ஆமாம் ரகு.... எதற்கு உடம்பை அலட்டிக் கொள்வது?" என்றார்.

"அம்மா! தாத்தா! நீங்கள் இருவரும் தடுக்கும் காரணம் எனக்குத் தெரியும். முத்து கண்கள் இல்லாத அந்தகன் என்பதும் எனக்குத் தெரியும்"...

"ஆ....ரேவதி...என்ன...." என்று லக்ஷ்மி அவள்மீது பாய்ந்தாள். ரேவதியின் முகத்தில் ப்ரேதக்களை சொட்டியது. உடல் வெளுத்து வியர்வை பொங்க தடுமாறினாள்.

"அம்மா...ரேவதியை ஒன்றும் கேட்காதே. அவள் மறைத்து வைத்த கடிதத்தை நான் திருடி படித்தேன். கருப்பஞ்சேரியிலிருந்து திரும்பியபோது நான் பயந்து அலறினேனே. ஊரையேப் பார்க்காது கண்களை மூடிக்கொண்டேனே....அம்மாதிரி இப்போது செய்யமாட்டேன். நீங்கள் அழைத்துச் செல்லவில்லை என்றால் நானே விசாரித்துக்கொண்டு சென்று விடுவேன்"

"ரகு சிறுபிள்ளைத் தனமாகப் பேசுகிறாய். நீ முத்துவைச் சந்தித்தால் உணர்ச்சி வசத்தில் ரசாபாசமாக ஏதாவது வெளியாகிவிடும். இத்தனைப் பாடுபட்டும் பலன் இருக்காது. முத்துதான்....உரலில் தலையைக் கொடுத்துவிட்டானே நமக்காக. பொறு ரகு அம்மாதிரியெல்லாம் செய்து விடாதே."

"அம்மா...நான் சென்றால் முத்துவோடு ஒரு வார்த்தையும் பேசமாட்டேன். அவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையாலேயே இப்படி ஓடிவந்தேன். தாத்தா ஏன் பேசாமல் நிற்கிறீர்கள். உங்களுக்கும் என் மேலிருந்த சந்தேகமும், வெறுப்பும் இன்னும் மாறவில்லையா?" என்று அவர் கையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான்.

"ரகு...நான் சமயம் பார்த்து கட்டாயம் அழைத்துப் போகிறேன். உன்னிடம் மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்பது உன் வார்த்தைகள் மூலம் வெளிப்படுகிறது. பார்ப்பதனால் மனது சாந்தி பெறும் என்றால் கட்டாயம் செய்வேன்" என்றார்.

பயத்தால் செத்துக் கொண்டிருக்கும் ரேவதியை லக்ஷ்மி உள்ளே அழைத்துச் சென்றாள். உள்ளே பொங்கி கொண்டிருந்த அழுகை படீரென வெடித்து வெளிவந்தது. "சித்தீ....என்னால்தான் சித்தி...நீ எழுதியிருந்தபடி கடிதத்தைக் கிழித்தெறிந்திருந்தால்... இப்படி ரகுவிற்குத் தெரிந்திருக்குமா?"

"ரேவதி...அசடு மாதிரி பேசாதே. அவன் கடிதத்தைப் படித்ததால்தான் அவனது வாழ்க்கையிலேயே ஒரு திருப்பம் ஏற்பட்டுவிட்டது என்று எண்ணுவோம். நன்றாக தெளிவாகப் பேசுகிறான். கிலி ஒழிந்து சதாசிவத்துடன் எப்படி பேசுகிறான் பார்." என்று தேற்றினாள்.

"ஆம் சித்தி...நீ கூறுவதுபோல் இக்கடிதத்தால் திருப்பம்தான் ஏற்பட்டிருக்கிறது. ஊரிலேயே...எப்படி பெரிய பேச்சாளர்போல் உணர்ச்சியுடன் என்னிடம் பேசினான்! அதிலிருந்தே கண்டு கொண்டேன்."

"ரகுவை சிறைக்கு அழைத்துப் போகும்போது, நீயும் போ ரேவதி. கண்ணில்லாத அந்தகனை முத்து இருந்தாலும், நீயும், ரகுவும் இவ்வளவு திருந்தி அவனைப் பார்க்க வந்திருப்பதை அறிந்ததும், தன் கண் வந்துவிட்டதுபோல் ஆனந்தப்படுவான்.

"சித்தீ! நாம் நினைப்பதுபோல் எல்லாம் நடக்கிறதா.... எப்படி எப்படி எல்லாம் நடக்கிறது? விதியை மதியால் வெல்லலாம் என்கிறார்களே...முடிந்ததா...எங்கோ வேலை செய்து கொண்டிருந்த முத்து, மற்றவர்களின் சண்டையை விலக்க எதற்கு வரவேண்டும். விதி அவனை இழுத்து வந்தது. விதியின் சதியை யாரால் தடுக்க முடிகிறது? உம்...."

"ரேவதி...நீ கூறுவது முற்றிலும் உண்மை...."

"ராதாவிற்கு எங்களை விட்டுப் பிரியவே மனதில்லை... நம் வீட்டில் இந்த புதியப்ரச்னை எழாதிருந்தால் அழைத்தே வந்திருப்பேன். ரகு அங்கு என்ன உற்சாகமாய் இருந்தான் தெரியுமா? இக்கடிதத்தைக் கண்டதும் தான் ஒரே பிடியில் நின்று, அவர்களிடம் அப்பாவின் வருடாந்திர சடங்கைக் காரணம் காட்டி கிளம்பிவிட்டான்."

"அம்மா! சதாசிவம் தாத்தாவிற்கு நேரமாகிறதாம்.... சித்தியும், பெண்ணும் பேசிக் குலவ ஆரம்பித்து விட்டீர்களே" என்று அவர்களை அழைக்க வந்தான் ரகு.

"ரகு! சதாசிவத் தாத்தா வந்தால் பேசதான் நீ இருக்கிறாயே அதனால்தான் சித்தி உள்ளே வந்தாள். என் தாத்தா நான் சொல்வது சரிதானே."

"சரியில்லாமற் போகுமா...நீ ரஞ்சனின் தங்கை யல் லவா...மேலும் சரோஜா, ரகு இவர்களின் அக்கா ஆயிற்றே" என்றார் சதாசிவம்.

"இது என்ன என் பேர் எதற்கு இங்கு உருளுகிறது. என்னைப்பற்றி புகழ்ந்து பேசும் படலமா? இகழ்ந்து பேசும் காண்டமா! அட! ரகு ரேவதி எப்போது வந்தார்கள். ஏன் அம்மா எனக்கு சொல்லி அனுப்புவதுதானே?"— இப்படி கேட்டுக்கொண்டே கத்தை புத்தகத்துடன் அங் நால்வரிடையில் வந்து நின்றாள் சரோஜா.

"ஏன் சரோ! இவர்கள் வந்த செய்தியை சொல்லி அனுப்பினால் உடனே ஓடி வந்து ஆரத்தி எடுப்பாயா!"— என்று லக்ஷ்மியும்,

"சரோ! இப்போது நீ ஏதாவது பெரிய காவியம் படிக் கிறாயா அம்மா? படலம், காண்டம் என்று பிளந்து தள்ளு கிறாயே. மேலும் ஒரு காண்டம் அளவிற்கு உன்னை யார் இகழ்ந்து பேசியிருக்கிறார்கள்?"—சதாசிவமும்,

"சித்தி! இன்னும் இவளுக்கு, அந்த நியூஸ்புடலின் குணம், வாயாடித்தனம் ஒன்றும் போகவில்லை."—என்று ரேவதியும்,

"அடேயப்பா! எத்தனைக் கேள்வி கேட்டுவிட்டாய் ஒரு நிமிடத்தில்?"—இப்படி ரகுவும் ஆளுக்கு ஒன்றாகக் கேட் டார்கள்.

"ஏதேது...ஆளுக்கு ஒன்றாய் பேசிவிட்டால் நான் மறந்து விடுவேன் என்ற எண்ணமோ. ஹூம்....முதலில் என்பெயர் அடிப்பட்ட காரணம்?" என்று விறைப்பாக நின்றாள் சரோ.

"சரோவின் அக்காவாகையால்தான் ரேவதியும் கெட்டிக்காரியாக இருக்கிறாள் என்று சொன்னேன். இது என்ன புகழ் படலத்தில் சேர்ந்ததுதானே?"

"உம்....இன்னும் என்ன பேசினீர்களோ? சதாசிவத் தாத்தா சொல்வதால், பெரியவர் பொய் சொல்லமாட்டார் என்று நம்புகிறேன்" என்று கூறிக்கொண்டே தாங்க மாட்டாது தாங்கிக் கொண்டிருந்த புத்தகங்களை மேஜை மீது வைத்தாள்.

"தாத்தா! எல்லோரும் உட்காருங்கள் வட்டமேஜை மகாநாடு கூடுவோம்" என்றவாறு ஆயாசத்துடன் சரோ அமர்ந்தாள். "இல்லையம்மா நான் போகவேண்டும். ஒரு முக்ய காரியம்" என்றார் சதாசிவம்.

"உங்கள் தூக்கத்திலும் வேலையின் நினைவுதான் இருக் குமோ? சரி தாத்தா" என்று தன் முகத்தைத் திரும்பிப்

பார்த்தாள். சதாசிவம் சென்ற பிறகு, "சரோ! இங்கே வா" என்றழைத்தான் ரகு. கண்களை அகல விரித்து கசக்கிக் கொண்டு நோக்கினுள் அவனை.

"ம்...நீ....ரகுதானே..."

"அதிலென்ன புதிய சந்தேகம்..."

"இல்லை...என்னை அன்பாக அழைத்ததால்......ஒரு வேளை ரஞ்சன் அண்ணவோ...என்று..."

"சரோ...நீ கூட என்னைக் குத்திக்காட்டுகிருயே...என்னிடம் வா...இனி உன்னை கோபிக்கமாட்டேன். அடிக்க மாட்டேன். உன் இஷ்டப்படி நடப்பேன். வாம்மா."

துள்ளி ஓடினுள் ரகுவிடம். "ரகு! நீ சமர்த்தாயிட்டே! இதைக்கேட்டா...ரஞ்சனுக்கு......முத்துவுக்கு எல்லாம் ரொம்ப சந்தோஷம் ஏற்படும். நான் கடவுளை எப்போதும் வேண்டிப்பேன். அந்தக் கடவுள் அருளாலேதான் நீ அம்மா மனது சந்தோஷப் படுகிறபடி மாறிவிட்டாய். அதனல் என்ன செய்யவேண்டும் தெரியுமா... சொல் பார்க்கலாம்."

"அதனுல் இன்று மாலை கோவிலுக்குப் போய் வர வேண்டும்."

"அட! சரியாகச் சொல்லிவிட்டாய்...இரு ரகு...வாஸுவையும் போய் அழைத்து வந்து விடுகிறேன்."

அவள் சென்ற பிறகு "அம்மா! தீபஸ்தம்பம், மற்ற விளக்குகளுக்கு எல்லாம் எண்ணை தவருது போகிறதா?" என்று கேட்டான் ரகு.

"ஐயோ மறந்தே விட்டது ரகு.'!

"அப்படியானல் இன்று செல்லும்போது எண்ணை எடுத்துக் கொண்டு போய் கொடுத்துவிட்டு வருகிறேன்." என்ருன். மனிதர்களோடு, கடவுள்மீதிலும் ஏற்பட்டிருந்த வெறுப்பும் ஓடி ஒளிந்துவிட்டதைக் காண லக்ஷ்மியின் உற்சாகம் மேலும் பெருகத் தொடங்கியது.

கோவிலுக்கு லக்ஷ்மி வரவில்லை. சதாசிவத்துடன் கூட்டி அனுப்பினுள். சரோஜாவும், வாஸுவும் என்றுமில்லாத ஆனந்தத்தில் திளைத்தனர். ரகுவும், ரேவதியும் தங்களை மறந்து கடவுளை தரிசித்தனர். ரகு தான் எடுத்து வந்த எண்ணையை, அக்கோவில் பையனிடம் கொடுத்து தன் எதிரிலேயே விளக்குகளுக்கு விடச் செய்தான். வீட்டிற்கும் கோவிலுக்கும் வெகுதூரம் இருந்ததால் காரில் வரும்போது அவர் பேசிய அத்தனைப் பேச்சும் ஆண்டவனைப் பற்றியதாகவே இருந்தது. அக் கோவிலில் முத்துவின் சகா ஒருவன் "ஏங்க...சாமி! அந்த முத்துவை நாணயமானவன்னு நான் நெனச்சேன். இப்படி களவு,

கொலையும் செய்யற பாவின்னு தெரியாது. ஜெயில்லே கம்பி எண்ணணுமே" என்று தன் மனதிலுள்ளதைக் கூறினன்.

ரகு எல்லோருடனும் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தாலும், இந்த வார்த்தைகள் மட்டும் பழுக்கக் காய்ச்சி ஊற்றிய ஈயத்தைப்போல் அவன் செவியைத் தாக்கிக் கொண்டேயிருந்தன. முத்துவைச் சென்று பார்க்கும் நாளும் நெருங்கி வந்தது. லக்ஷ்மிக்கு பயம் வாட்டத் தொடங்கியது. ஆனல் ரகுவோ ஆவலுடன் காணப்பட்டான். சதாசிவத்தை ஏற்றிக்கொண்டு காரும் வாயிலில் வந்து நின்றது. கடைசி நிமிடத்தில் ரேவதி, ரகுவோடு லக்ஷ்மியும் கிளம்பிவிட்டாள்.

கஷ்டமின்றி உள்ளே முத்து படுத்திருக்கும் இடத்திற்குச் சென்றனர். முத்துவின் கண் கட்டுக்களை அவிழ்த்து விட்டார்கள். ஆனல் புருவத்தில் ஏற்பட்ட காயத்தின் வடு மாத்திரம் நன்ருகத் தெரிந்தது.

"முத்து!" என்று அலறிக் கொண்டு ரகு பாய்ந்து ஓடினன்.

இக்குரலைக் கேட்ட முத்து படுக்கையில் எழுந்தமர்ந்தான். "யாரு?...சின்னையா...சின்னையா...எசமான்...ரகுவா எங்கே..." என்று கைகளை தன்னைச்சுற்றிலும் தடவினன். "இதோ...முத்து..." அவன் அருகில் போய் அமர்ந்தான் ரகு. "சின்னையா...சின்னையா......" என்று அணைத்துக் கொண்டான்.

பார்வையற்ற சூனியமான அக் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து, உலர்ந்து ஒட்டிப் போயிருந்த தாடையில் வழிந்தோடத் தொடங்கியது. நெஞ்சம் துக்கம் அடைத்ததுபோல, ரகுவின் வாயையும் அடைத்துவிட்டது. அவன் கண்களும் கண்ணீர் விழுவதைத் தவிர வேறென்றும் செய்யவில்லை. முகத்தைப் பொத்திக் கொண்டான்.

"முத்து உன்னை பார்க்கமுடியவில்லையே... எப்படிப் பார்ப்பேன். கண்ணில்லாத உன்னை எப்படி பார்ப்பேன்?" என்று கதறினன். இக்காட்சியை யாராலும் சகிக்க முடியவில்லை" ரேவதியும் குலுங்க குலுங்க அழுதாள். உணர்ச்சி வசத்தால் மயங்கி தன் சித்தியின் மீது சாய்ந்துவிட்டாள். ரேவதியை ஒரு கையால் அணைத்துக் கொண்டு, மறு கையில் தன் காதுகளைப் பொத்தி தன் துக்கத்தை மறைத்தாள். லக்ஷ்மிக்கு அழுகையோடு ரகுவின் வாயிலிருந்து எந்த சமயத்தில் என்ன வார்த்தை வந்து விடுமோ என்ற திகிலும் அவளைப் பிடித்தாட்டிக் கொண்டிருந்தது.

"சின்னையா!....இன்னும யார் யார் வந்திருக்காங்க..." என்று வினவினான் முத்து. 'சின்னையா' என்பதில் முன்பிருந்ததைவிட அதிக அன்பும் குழைவுமல்லவா காணப்படுகிறது. நான் செய்த துரோகத்தை மறந்தல்லவா பேசுகிறான். என்னைப்போல ஒரு கிராதகன், முத்துவைப் போன்றவர்கள் வாழும் உலகத்தில் இருப்பதே தவறு' என்று ரகு எண்ணி சோர்ந்தான்.



"ரேவதி....அம்மா, தாத்தாவும் வந்திருக்கிறார்கள் முத்து. உன் நிலையை காண சகிக்காமல் அழுதவாறு நிற்கிறார்கள்" என்றான் நெஞ்சடைக்க.

"ரேவதி...வந்திருக்கா.... ரேவதி... ரேவதி.... வாம்மா. என் நிலையைக் கண்டு நீங்க ஏம்மா அழணும். என் விதிப் படி என் வாழ்க்கை ஓடுது" என்று முத்து தேற்றினான். 'ரகு ஏதாவது கூறிவிடுவானோ' என்ற பயம் முத்துவிற்கும் இருந்ததால், பேச்சை வேறு விதத்தில் திருப்பினான். தூரே நின்று இங்கு நடக்கும் சம்பவங்களையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த, சிறை அதிகாரி—ஜெய்லர், "ஏன் சார்! இந்த பையன்தானோ ரஞ்சன் என்பது. முத்து அடிக்கடி கூறுவான் அந்த பெயரை. அந்த ஐயா போன பிறகுதான் என் புத்தி மழுங்கிவிட்டது என்றும் சொல்லுவான். இந்தப் பையன் துடிப்பதைப் பார்த்தால் அப்படி தோன்றியது" என்று சதாசிவத்திடம் கேட்டார்.

"ரஞ்சன் இல்லை சார். அவன் தம்பி ரகு. இவனும் வெளியூரில் இருந்தவன்தான். முத்துவிற்குக் கண் போய் விட்டது என்ற செய்தி கேட்டு, அங்கிருக்கப் பிடிக்காது ஓடி வந்துவிட்டான். ரகுவிற்கும் முத்து என்றால் உயிர். அக்குடும்பத்திலேயே எல்லோருக்கும் 'முத்து' என்றால் தனி விச்வாசம்" என்றார். பிறகு "இதோ....இவள் ரஞ்சனின் தங்கை. இவளும் ஊரிலிருந்து ரகுவோடுதான் வந்தாள்" என்று இருவரையும் அறிமுகம் செய்தார்.

"சார்! இந்த காலத்தில் வேலைக்காரர்களிடம் யாருக்கும் அன்போ, இரக்கமோ கிடையாது. இது அதிசயம் தான். இவ்வளவு நல்லவன்: இப்படிப்பட்ட காரியத்தை செய்துவிட்டு, இங்கு அவதிப்படுகிறானே" என்று அவரும் தன் துக்கத்தைப் பகிர்ந்து கொண்டார்.

'ஹாூம்...வேலைக்காரனிடம் எனக்கு அன்பும், இரக்கமும் முதலில் இருந்ததா.... இவருக்கு என்ன தெரியும் பாவம். முத்துதான் களவாணி என்று நினைத்திருக்கிறார். நானல்லவா?....இந்த நல்ல பெயரைத் தட்டிக் கொண்டு போகும் இந்த பாவியல்லவா திருடன்...கொலைகாரன்... குடும்ப துரோகி....ஏழையைக் கெடுத்த பாழும் சண்டாளன் இப்படிப்பட்ட என்னைப்போய் வேலைக்காரனிடம் என்ன அன்பு! என்று வியப்படைகிறார். இவ்வுலகத்தில் ஆயிரக் கணக்கான சட்டங்களும், கோர்ட்டுகளும் இருந்து என்ன பயன். 'தோட்டத்தில் பழத்தைத் தின்றவனுக்கு ஒன்றுமில்லை. கொட்டை சப்பினவனுக்கு தண்டனை' இதுதானே உலக வழக்கமாகி விட்டது. அதே போல் ஏழை ஒரு தவறு செய்து விட்டால், அவன் உயிரேபோய்விடும். ஆனால்

பணமுள்ளவன் தினம் ஒரு தவறு செய்தாலும், பணக் குவியலில் மறைந்து விடும். முத்து மனமுவந்து என்னைக் காப்பாற்ற முன் வந்தாலும், வள்ளியின் கதி என்னவா யிற்று. அவளை, பொருளாகவும் பணமாகவும் கொடுத்துத் தானே த்ருப்தி செய்து விடுகிறார்கள். என்ன உலகமடா?' என்று உள்ளுக்குள் பொருமினான். 'எல்லா முதுமொழி களுக்கும் நானே உதாரணமாகி விட்டேனே' என்றும் ஏங்கினான்.

"ரகு! வீட்டுக்குபோகநேரமாய்விட்டது எழுந்திரு".என்று எழுந்தசப்தம்தான் அவன்சிந்தனைத்தொடரை அறுத்தது.

அத்தியாயம் 23

அற்புத வேலையும்—அன்பின் பரிசும்

எல்லோரும் முத்துவின் நினைவிலேயே உழன்று கொண்டிருந்ததால் நாட்கள் ஓடுவதை எப்படி அறிவார்கள்?

ஒருநாள் ''ஸார் தந்தி!'' என்ற குரல் வாயிற் பக்கத்திலிருந்து ஒலித்தது. லக்ஷ்மி வெடவெடத்துப் போனாள். ரேவதி எழுந்திருக்கமாட்டாது அமர்ந்துவிட் டாள். அவர்கள் இருவர் நிலையையும் பார்த்து பயந்த சரோஜா ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள், வாஸுவும் பின்பற்றி நடுங்கினான்.

மிஞ்சியிருந்த ரகுதான் எழுந்து சென்றான். அவன் கரங்களும் தந்தியை வாங்கும்போது நடுங்கின. "அம்மா! உன் பேரிற்குதான் வந்திருக்கிறது. கையெழுத்து போடு."

"ரகு யாரிடமிருந்துடா?....என் பேருக்கா....என்னடா இது சோதனை.!'

"ரஞ்சனிடமிருந்துதானம்மா ... நடுங்காதே ... கையெ ழுத்து போடு...'' ஒருவழியாக தந்தி சேவகனை அனுப்பி னார்கள்.

"நீ ஆண்பிள்ளையாடா....எங்கள் மனது தாங்கவில்லை. சீக்கிரம்...பிரி....சீக்கிரம்..."

"அப்ப...ஒன்றுமில்லை...ஒரே கலாட்டா செய்துவிட் டீர்களே...ரஞ்சன் அமெரிக்காவிலிருந்து பம்பாய் வந்து விட்டானாம். அங்கிருந்து அடித்திருக்கிறான். இன்று மாலை விமான நிலையத்திற்குக் கார் கொண்டுவரும்படி."

"என்ன ரஞ்சன் வருகிறானா...எதற்கு?...கடிதத்தில் கூட குறிப்பிடவில்லையே...படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு இங்கு என்ன வேலை...ஐயோ. ரகு...அவனுக்கு உடம்பு ஏதாவது சரியில்லையா?...அவன் அப்படி வரமாட்

டானே...நான் என்ன செய்வேன்....என் வயிற்றைக் கலக்குகிறதே....ரேவதி....ஆ....ரஞ்சனுக்கு என்னவென்று தெரியவில்லையே" என்று பெரியதாக அழத் தொடங்கினாள். ரகு தனக்கு மனது சரியில்லை என்று மாடிக்குச் சென்றுவிட்டான்.

ரேவதியும் நிலை தெரியாது தவித்தாள். 'எங்கு போய் விசாரித்தால் விவரம் தெரியும். ரகுவும் மாடிக்குப் போய் விட்டான். ஒரு வேளை முத்துவின் விஷயம் தெரிந்திருக்குமா? எப்படி தெரியும் அவன் பெயர்தான் சிறையில் மாரி முத்துவாயிற்றே? ஐயோ...அண்ணா' என்று அவளும் புலம்பினாள்.

இவர்கள் மனமும் எரிந்துகொண்டிருக்கையில், வெய்யிலும் தன் கைவரிசையைக் காட்டி, உடலையும் வறுத்து எடுத்தது.

மாலையில் ஆனந்தபவனம் அமளிபட்டது. உள்ளுக்குள் எல்லோரும் கவலையில் வயப்பட்டிருந்தாலும் விமான நிலையத்திற்குக் கிளம்புவதற்கு தங்களை தயார் செய்து கொண்டிருந்தார்கள். சரோஜாவையும் வாஸுவையும் தடுத்தாலும் 'பாவம்! குழந்தைகள் அவர்கள் ஆசையைக் கெடுப்பானேன் என்ற எண்ணத்துடன் அவர்களையும் அனுமதித்துவிட்டாள் லக்ஷ்மி.

பலநாள் ஒட்டிப் பழகாத, பலநாள் காணாத ஒருவர் வந்தால் எல்லா வீட்டுக் குழந்தைகளும் அவர்கள் பின்னாலே சுற்றி வட்டமிடும். "நான் அவரோடுதான் சாப்பிடுவேன். அவர் அருகில்தான் உறங்குவேன்' என்று பிடிவாதம் பிடிப்பதும் சகஜமான ஒரு வழக்கம். அதன்படியே "போடா....நான்தான் ரகு பக்கத்தில் உட்காருவேன்" என்று சரோஜாவும் "ரகு....ரகு...நான் உட்காருகிறேன்" என்று வாஸுவும் காரில் ரகுவிடம் அமர சண்டையிடத் தொடங்கினர்.

"இது என்ன கிளம்பும்போது சண்டை...அபசகுனம் போல், ஏதோ ஒரு இடத்தில் உட்கார்ந்தால் சரி. இல்லாவிட்டால் நீங்கள் வரவே வேண்டாம்'! என்ற லக்ஷ்மியின் அதட்டலைக் கேட்டு இருவரும் 'கப்சிப்' என்று அடங்கி சைகையிலேயே ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டு சண்டை செய்தனர்.

'தன் மாற்றத்தைப்பற்றி ரஞ்சனுக்கு சித்தி எழுதியிருப்பாள், அதை ஊர்ஜிதப்படுத்தும் முறையில் நம் நடையுடை பாவனைகள் அமையவேண்டும் என்று ரேவதி மிகவும்

சாதாரண உடை அணிந்து அடக்கமே உருவான ஒரு ஆரணங்காய் தோற்றமளித்தாள்.

விமான நிலையத்தில் எல்லோரும், 'எப்போது வரும் விமானம்' என்று ஆகாயத்தை அண்ணாந்து நோக்கியவாறு இருந்தனர். ஆ! அதோ....ஒரு விமானம்....இறங்குகிறதே....! எல்லோர் முகத்திலும் மலர்ச்சி.

"அக்கா! இதுதானே ரஞ்சன் அண்ணாவின் விமானம்?'' என்றாள் சரோஜா.

"சு...பேசாமல் இரு....இதே விமானம்தான். ஆ... அண்ணா வருகிறான் பார் சரோ...'' என்று காலை எம்பினாள்.

தாய்பசுவைக் கண்ட கன்றைப்போல் தாவி ஓடினான் ரகு. "அண்ணா!''... அண்ணனும் தம்பியும் கட்டியணைத்து உச்சி முகர்ந்தனர். "எதற்கு ரகு! தந்தியடித்தாய்...என்ன சமாசாரம்....என் உடலில் உயிரே இருக்கவில்லை. என் உடல் வருவதற்கு முன் என் உயிர் இங்கு பறந்து வந்து விட்டது'' என்று வினவினான் ரகுவை அணைத்தபடியே.

"என்ன?....ரகு தந்தியடித்தானா?...'' என்று லக்ஷ்மி பதட்டத்துடன் முன்வந்தாள்.

"ரகு....நீயா?....எதற்கு?...ஏன்?'' என பதறினாள் ரேவதி.

"ரகு அண்ணாவா?'' என்று தாடையில் கைவைத்தாள் சரோஜா.

"எதற்குப்பா ரகு...ரஞ்சனுக்கு...அவசர தந்தி கொடுத்தாய்''—இது சதாசிவத்தின் கேள்வி. வாஸுவோ விழித்து நின்றான்.

மற்றொரு குரல்! ரஞ்சன் எதிர்நோக்கிய குரல் அவன் விழிகள் சுற்றி அந்நபரைத் தேடின. "முத்து எங்கே?'' லக்ஷ்மியை இக்கேள்வி பற்றி எரித்தது. ரஞ்சனின் கையை பிடித்தவாறு, "ரஞ்சன் வாப்பா...வீட்டிற்குச் செல்லலாம்....விமான நிலையத்தில் எதற்கு நம் விஷயங்களை பேசுவது'' என அழைத்துச் சென்றாள். ரஞ்சனின் உள்ளத்தில் அப்போதே புயலடிக்கத் தொடங்கியது. லக்ஷ்மியும் காரில் வரும்போது சாமர்த்தியமாக வேறு விஷயத்தைப் பற்றியே பேச்சுக் கொடுத்து வந்தாள்.

இங்கு ஒவ்வொருவரும் சம்பந்தமில்லாது பேசுவதைக் கேட்டதும் ஏற்பட்ட திகிலால், தன் ப்ரயாணத்தால் ஏற்பட்ட ஆயாசத்தையும் மறந்து, எல்லாவற்றையும் பற்றி விசாரிக்கத் தொடங்கினான். சதாசிவம் உள்பட எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

"ரகு! நீ தந்தியடித்த விஷயம் ஒருவருக்கும் தெரியாதா? எதற்காக திடீரென்று அடித்தாய்? நீ நம் ஊரிலிருந்து தந்தி கொடுக்கவில்லை என்பதை அறிந்தும், உன் விலாசம் இல்லாத காரணத்தால் நம் வீட்டிற்கு, சித்தியின் பேருக்கே பதில் தந்தி கொடுத்துவிட்டேன்" என்று ரஞ்சன் விசாரணையைத் துவக்கினான்.

"ரகு....நீயா தந்தி கொடுத்தாய்? இதை என்னால் நம்ப முடியவில்லையே...எங்கிருந்து...எப்போது கொடுத்தாய்."

"அம்மா! யாரும் கோபிக்காமல் கேளுங்கள். நான் செய்த தவறுகளை நான் உணர்ந்தது முதற்கொண்டே என் மனது ஒருநிலை கொள்ளாது தவித்தது. நீ ரேவதிக்கு எழுதிய கடிதம் என் கண்ணில் பட்டது முதல் உண்மையில் நான் பித்தனாக மாறிவிட்டேன் என்று கூறலாம். உடனே புறப்பட்டேன். ரேவதி நான் கோவிலுக்குதான் சென்று வந்தேன் என்று இன்னும் நினைத்துக்கொண்டிருக்கிறாள் பாவம். தந்தியடிக்கவே சென்றேன். அதன் பலனும் கிடைத்துவிட்டது."

"ரகு உன் மன நிம்மதிக்காக, ரஞ்சனின் படிப்பைப் பாழாக்குவதா?" என்றார் சதாசிவம்.

"தாத்தா! இந்த விஷயங்கள் பின்பு யோசிக்க வேண்டியவை...சரி. முத்து எங்கே? வள்ளி....அவர்கள் குழந்தை யாரையும் காணவில்லையே?" என்று ஆவலுடன் கேட்டான். அவன் ஆவலில் மண்போடக்கூடிய விஷயத்தை லக்ஷ்மி கூறப்போகிறாள் என்பது ரஞ்சனுக்கு எப்படி தெரியும்?

"ரஞ்சன்....அது...அ ... சொல்கிறேன் .... பொறுமையோடு...கேள். வள்ளி அவன் அண்ணன் வீடு சென்றிருக்கிறாள்.'! மேலே கூறமுடியாமல் தொண்டையைப் பிடித்துக்கொண்டாள் லக்ஷ்மி. "முத்து...சிறையிலிருக்கிறான்... சிறையில்...."

"ஆ...சிறையிலா...?என் முத்துவா சிறையில்?...எதனால் சித்தி?...எந்த சிறையில்? இப்போதே செல்வேன்...." என்று எழுந்தான். அவனை சதாசிவம் பிடித்தமர்த்தினார்.

"ரஞ்சன் முதலிலேயே சொன்னேனே...ஆத்திரப்படாதே...." லக்ஷ்மி நடுவில் நிறுத்தினாள். ரேவதியின் புறம் திரும்பினாள். குறிப்பறிந்த ரேவதி சரோ வாஸுவை ஏதோ காரணம் காட்டி அழைத்துச் சென்றாள்.

அதுவரையில் நடந்தவைகளையெல்லாம் லக்ஷ்மி கூறிக்கொண்டே வந்தாள்.

"அடியா? என்ன சித்தி நீ கூறுவதெல்லாம் உண்மையா? ரகுவாலா முத்து கைதியானுன்?...சொல் சித்தி...." என்று மறுபடியும் கத்தினுன் ரஞ்சன். ரகுவைத் திரும்பிப் பார்த்தான். ரகு தன் கண்ணீரை மறைக்கத் தலையைக் கவிழ்த்தான்.

"அந்த அடியில்...நான் என் வாயால்...கூறமுடியவில்லை...முத்துவின் வலது கண் பார்வை போய்விட்டதாம். ஏற்கெனவே இடது கண் இல்லையாமே...அந்த விஷயம் யாருக்கும் தெரியாதே..."

ரஞ்சன் 'படார், படார்' என்று தலையிலடித்து தலைமயிரைப் பிய்த்துக்கொண்டான். சோபாவில் தலையை மோதிக்கொண்டான். "ஐயோ! சித்தி குடிமுழுகிவிட்டதே. வலது கண்ணு....ஆ...முத்து! வலது கண்ணுமா போய்விட்டது. உங்கள் ஒருவருக்கும் தெரியாது சித்தி.... அந்த மர்மம். முத்துவிற்கு இடது கண்ணும் கிடையாது. இப்போது என் முத்து...என் அருமை முத்து....உயிரே... நீ அந்தகனு....தடவும் குருடனு?" என்று அலறித் துடித்தான்.

ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. "உனக்கு எப்படி தெரியும் ரஞ்சன். அவன் இடது கண் எப்போது போயிற்று?" என்று அவனைக் குலுக்கிக் கேட்டான் ரகு.

"இதோ கண்ணீர் வடிக்கிறதே, இந்தப் புனிதக் கண் முத்துவினுடையது. என் இடது கண்...முத்துவின் நயனங்கள்தான்" என்று கூறிவிட்டு மீண்டும் குப்புறப்படுத்தான்.

"என்ன! முத்து கண்களா...அது எப்படி உனக்கு வந்தது!...நம்பமுடியாத விசித்திரமா யிருக்கே. ரஞ்சன்.... ஐயோ...ரஞ்சன் எழுந்திரப்பா...விவரமாகச் சொல்லேன். உண்மையை அறியத் துடிக்கிறோம். சொல்லப்பா" என்று லக்ஷ்மி ரஞ்சனை தன் மீது சாய்த்துக் கொண்டாள்.

"உண்மையைச் சொல்வதா ?...சொல்லி ?...என்ன பயன் சித்தி? நானும் முத்துவும் அப்பா போன புதிதில் குளிர்ச்சோலை சென்றிருந்தோமே...நினைவிருக்கிறதா?... அப்போது எனக்கு பலவீனத்தாலும், அதிர்ச்சியாலும் இடது கண் திடீரென்று மறைத்து விட்டது. என் கண்ணில் ஏற்கனவே என்ன கெடுதல் இருந்ததோ? அங்கு கண் சிகிச்சையிலேயே சிறந்தவரான ஒரு டாக்டரிடம் சென்றோம். உடனே அக்கண்ணை எடுக்கவில்லை என்றால் மற்றொரு கண்ணிற்கும் இக்கதி ஏற்படும் என்றார். முத்து... துணிந்தான் சித்தி....எனக்காக—நம் குடும்பத்திற்காக உயிரையே கொடுக்கத் துணிந்தவனுக்கு ஒரு கண் கொடுப்

பது பிரமாதமா? கொடுத்தான் அவன் கண்ணை. இந்த விஷயத்தை ரகசியமாக மூடி மறைத்து விட்டோம். இதனால் என் அமெரிக்க ப்ரயாணம் தடைபடுமோ என்ற பயம் தான். அந்த டாக்டரும் சத்தியம் செய்தார்...முத்து இல்லா திருந்தால் நான் ஒரு மனிதனாக இருக்க முடியுமா? ஐயோ முத்து. அப்படிப்பட்ட உனக்கா இக்கதி. எனக்குக் கண்ணைக் கொடுத்துக் காத்தாய், ரகுவிற்காக, உயிரையும் சாமானியமாக எண்ணி, சிறையிலும் மாட்டிக் கொண்டாய். மற்றொரு கண்ணையும் பறி கொடுத்துவிட்டாயே...முத்து!" பாதி அழுகையும், நிறுத்தியும் விஷயத்தைக் கூறி முடித்தான்.

"ஹா....டாக்டர்கள் சொன்னார்கள் அவன் விழி ஆட்டு விழி என்று. அவன் மறைத்து விட்டான். ரஞ்சன் அழாதே அப்பா...அவன் குணத்தையும், அன்பையும் நானே முத லில் அவமதித்தேன்...அவனல்லவா மனிதன். தன் இரு கண்களாகவே உன்னையும் ரகுவையும் பாவித்தான். கண் களையும் அர்ப்பணித்து விட்டான்."

"வள்ளியை நினைத்தால் என்னை உடலோடு துடிக்க வைக்கிறது..."

"வள்ளி மூடிமறைத்து நம்மை அம்பலத்தில் இழுத்து விடாமல் இருந்தாளே...வேறு யாராவது அப்படி செய்வார் களா? ரஞ்சன் எழுந்திரு...ப்ரயாணக் களைப்போடு, இது வும் சேர்ந்து உன்னைப் பாதி மனிதனாக்கிவிட்டது ஏதாவது சாப்பிடப்பா"

"ஹூம்...சாப்பிடுவதா சித்தி...முத்துவைப் பார்க் காது...எதையும் கண்ணாலும் பார்க்கமாட்டேன். இதோ போகிறேன்" என்று எழுந்து தானே காரில் அமர்ந்து ஓட் டவும் தொடங்கினான். யார் அழைப்பும் அவன் காதில் விழ வில்லை. சதாசிவம் நின்றவர் நின்றவராகவே ஆகிவிட்டார். ரகு அவரைப் பிடித்து அமரச் செய்தான். அவர் உணர்ச்சி யற்றிருந்தாலும், உதடுகள் 'முத்து முத்து' என்று உருப்போட்டுக் கொண்டிருந்தன.

காரிலேறி காம்பௌண்டை தாண்டும் சமயத்தில் "ரஞ் சன் ஐயா" என்று உணர்ச்சி பொங்க யாரோ அழைத் தார்கள். "ஆ! வள்ளியா" என்று காரிலிருந்து வெளியே குதித்தான் ரஞ்சன்.

"ஐயா!" என்றவள் நெஞ்சடைக்கக் கண்ணீர் விட் டாள்.

"வள்ளீ! எல்லாம் அறிந்தேன். என்மேல்தான் தவறு. இந்நிலையில் நான் குடும்பத்தை விட்டுவிட்டு, எதற்காகப் படிக்க ஓடினேன். என் சுயநலத்தால் தானே. என்னை மன்

னித்துவிடு வள்ளி. இப்போதுதான் வந்தேன். முத்துவைப் பார்க்கவே ஓடுகிறேன். வருகிறாயா?"—அவன் பேசினானே தவிர அவன் மனம் எங்கோ ஓடிக்கொண்டிருந்தது.

"ஐயோ...எசமான் அதுக்காவதானே ஓடியாந்தேன். அங்கே போனேன். அவரு இல்லே விடுதலே ஆயி போயிட்டாருன்னு சொல்லிப்புட்டாங்க...எங்கே தேடுவேன்... என்ன செய்வேன்...என் கதி...என்னங்க ஆவறது" என்று காலில் விழுந்து விட்டாள்.

ரஞ்சனின் மனதில் அடித்துக் கொண்டிருந்த புயல் பூகம்பமாக உருவெடுத்து ஆட்டத் தொடங்கியது.

"என்ன?...விடுதலையாகி விட்டானா...ஐயோ பாவி எனக்குப் பார்க்கக்கூட அதிர்ஷ்டம் இல்லையே. வள்ளி நீ ஏறு...நான் ஏதாவது வழி செய்கிறேன்" என்றவன் முன்புறம் ஏறியமர்ந்தான். வள்ளியையும், அவனையும் தாங்கிக் கொண்டு கார் அவ்வூர் சிறையை நோக்கி சென்று கொண்டிருந்தது. காற்று பரவுவதைவிட விஷயம் சீக்கிரம் பரவி விடுவதில்லையா? 'அட! ரஞ்சன் போகிறானே. வள்ளியை அழைத்துக் கொண்டு' என்று எல்லோர் வீட்டிலும் தலைகள் எட்டிப் பார்த்தன.

சிறையில் முத்துவா காத்திருந்தான். ஏமாற்றம் தானே! "சார்! மாரிமுத்து கைதியாக வந்தது முதலே அவன் நடத்தையிலோ, வேலையிலோ ஒரு குற்றம் காணவில்லை நாங்கள். அவன் எல்லோரிடமும் நன்மதிப்புப் பெற்றுவிட்டான். அதனாலேயே, அவனுக்குக் கொடுத்திருந்த தண்டனையில் பல மாதங்கள் குறைத்துவிட்டார்கள். இப்போது இரண்டு கண்ணும் இல்லாத அவனை வைத்துக் கொண்டு என்ன செய்வது. இரக்கத்தின் பேரில் அவனை விடுதலை செய்ய 'ஆர்டர்' வந்துவிட்டது. அவன் நேற்று விடுதலையாகி சென்றுவிட்டான். நானும் நான்கு நாட்கள் ஓய்வில் இருந்ததால், எனக்கும் இச்செய்தி இப்போது தான் தெரியும்" என்று சிறை அதிகாரி கூறினார்.

"சார் அப்போது மாரிமுத்து எங்கு போனான் என்பது தெரியாதா? வேறு கைதிகளிடமாவது விசாரித்துப் பாருங்களேன். இதோ இவள் நிலைமையை சகிக்க முடிகிறதா?"

அவர் மனம் உருகிவிட்டது. "உம் என்ன செய்வது. இங்கு சுற்றுபுறத்தில்தான் எங்காவது இருப்பான் தேடுங்கள்..." அவர் அதற்கு மேல் என்ன சொல்வார்.

ரஞ்சனுக்கு வள்ளியை நிமிர்ந்து நோக்க அவமானமாய் இருந்தது. தன்னை ஒரு குற்றவாளியாக எண்ணினான். பதிலொன்றும் கூறாது, வள்ளியை ஏற்றிக்கொண்டு சுற்றினான். காரின் பெட்ரோலை தண்ணீராகச் செலவழித்தான்.

ஓட்டினான் ஓட்டினான் கைகால்கள் சோர்ந்து விழும்வரை ஓட்டினான். முத்து வழக்கமாகச் செல்லும் இடங்களையும் துருவிப் பார்த்தான்.

அவ்வூரைச் சுற்றியுள்ள ஒரு சந்து பொந்துவிடாது சல்லடையிட்டு சலித்தான். "வள்ளீ! தெருவிலும் நன்றாக கவனித்துக்கொண்டு வா...எங்காவது கண்ணில் படுவான்'' என்று எச்சரித்தான். வெளியில் உடல் வியர்வைக் கொட்டிக் கொண்டிருந்தது. உள்ளமோ எண்ணங்களை வாரி, சிதறடிக்கச் செய்தது. ஆயிற்று! அவ்வூரின் எல்லையையும் கடந்தாயிற்று.. ரஞ்சன் மனதில் இருந்த நம்பிக்கை ஓடி ஒளிய ஆரம்பித்தது.

அவனால் ஒன்றும் எண்ண முடியவில்லை. 'முத்து குருடனாயிற்றே...எங்காவது, காரில் அகப்பட்டுக் கொண்டிருப்பானோ? அப்படியிருந்தால் ஆஸ்பத்திரிகளிலல்லவா இருப்பான்? உம் திருப்புவோம்'—இந்த யோசனை கிளறிவிடவே, ஒவ்வொரு ஆஸ்பத்திரியாக ஏறியிறங்கினான். ஒவ்வொரு படியும் ஏறியிறங்குவதற்குள் அவன் மூச்சு போய் மூச்சு வந்தது. 'என் முத்துவின் கண்கள் போயின...அவனையும் காணவில்லை. ஒருவருக்கும் உபயோகமில்லாத இந்த உயிர் போனால்தான் என்ன?' என்ற மனப்பான்மை ஏற்பட்டு விட்டது. பொழுதும் சாய்ந்துகொண்டே வந்தது.

அதோ! கோவில் கோபுரம் தெரிகிறதே. கார் ஓட்டும் கரங்களாலேயே கை குவித்தான் "ஆண்டவனே! எங்கள் குலவிளக்கை....தீபஸ்தம்பத்தை எங்களுக்குக் காட்டிவிடு.... கருணைக் கடலே ...அளித்துவிடு இன்னுமா உன் விளையாட்டுக்கள் ஓயவில்லை'' என்று வேண்டித் தொழுதான். வள்ளீ கரகரவென்று கண்ணீர் உகுத்தாள். 'ஹும் நம் தீபஸ்தம்பமும் பிரகாசிக்கிறதே. சுடர் விடுகிறதே....ஆனால் என் முத்து?...'

"மச்சான்...'' என்று கூவி முகத்தைப் பொத்திக் கொண்டாள். ஓடும் இயந்திரம் நின்றது. "வள்ளீ! எங்கே... எங்கே...உன் மச்சான்...கண்டாயா?'' என்று துடித்தான். "அதோ...பாருங்க...தீபஸ்தம்பத்தின் அடியிலே...ஐயோ கப்பரை ஏந்திக்கொண்டு...'' அலறினாள் அந்த தெருவே அதிர.

திரும்பினான் ரஞ்சன் "முத்துவா....இது முத்துவா... இல்லவே இல்லை நான் நம்பமாட்டேன். உடலும் வயிறும் ஒட்டி எலும்பு கூடாக அமர்ந்திருக்கும் இவன் முத்துவா?'' தெருவை மறந்து, தன்னிலை துறந்து ஓடினான்.

"முத்து!'' என்று கதறி, கையிலிருந்த கப்பரையைப் பிடுங்கி எறிந்துவிட்டு அணைத்துக் கொண்டான். குருடனை

யிருந்தாலும், குழந்தையிலிருந்து பழகிய குரலல்லவா? "ஆ எசமானு? ரஞ்சன் எசமானு? எப்ப அம்ருக்காவிலேருந்து வந்தீங்க?... ஏன் வந்தீங்க..." இக்கேள்விகளுக்கு பதில்கள் எழவில்லை. காரணம் ரஞ்சன் மூர்ச்சை அடைந்துவிட்டான்.

"ஏன் எசமான் பேசவில்லை...கூட யார் வந்திருக் காங்கா" ரஞ்சனை தடவினுன். "மச்சான்! இந்தப் பாவியும் வந்திருக்கேன்."—இத்தனை நேரம் துக்கத்தால் வாயடைத் திருந்த வள்ளி குரலிறுத்தாள்.

"வள்ளியா? நீதான் சின்ன எசமானுக்கு சொல்லிட் டையா? என் மானம் போகுதே வள்ளி...ஐயோ மூர்ச்சை யாயிட்டாரா? பாரு. பேசவில்லையே...ஓடு... நீ சீக்கிரம்... தண்ணீர் கொண்டுவா"

மூச்சிறைக்க ஓடினுள். தண்ணீருடன் திரும்பினுள். அக்குருடனும், அவன் மனைவியும் ரஞ்சனின் மயக்கத்தை தெளிவித்தனர். கண் விழித்தான் ரஞ்சன். ஏற்கனவே இருந்த ப்ரயாணக் களைப்பும், ஒன்றும் அருந்தாமல் பல இடங்களில், நடந்தும் காரிலும் அலைந்து ஏற்பட்ட ஆயாச மும், முத்துவைக் கண்டவுடன் அதிர்ச்சியால் ஏற்பட்ட துடிப்பும் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்து அவனை இந்நிலைக் குள்ளாக்கி விட்டன.

"முத்தா.. வள்ளி....என்னை மன்னித்து விடுங்கள்." என்ற வார்த்தைகள்தான் முதன் முதலில் அவன் கண்டத் திலிருந்து ஒலித்தன.

"எசமான்...அப்படி பேசாதீங்க...நீங்க வந்த கார ணம்? என் விஷயம் எப்படித் தெரிந்தது? விபரமாகச் சொல்லுங்க."

"சொல்கிறேன் முத்து....என் குடும்பம் உன்னை, கைதி, குருடன், என்ற நிலைக்குள்ளாக்கியதோடில்லாமல், கப் பரை ஏந்தும் பிச்சைக்காரனுகவும் செய்துவிட்டதே. இதை என்னுல் நினைக்கவும் முடியவில்லை. அதோ கார் நிற்கிறது. வா வீட்டிற்குப் போகலாம்" என்று அவனைத் தூக்கினுன்.

"உங்க வார்த்தையை இவன் இதுவரைத் தட்டினது கிடையாது. ஆனுல் வீட்டிற்கு நான் வரமாட்டேன். நான் வந்து என்ன ப்ரயோசனம். கண்ணில்லாத குருடன் நம்ப வீட்டுப் படி ஏறமாட்டேன். என்னை மன்னிச்சிடுங்க. இத்த ஆண்டவனுக்கு எதிரில், நம்ப தீபஸ்தம்பத்துக்கு கீழேயே என் காலம் கழியட்டுங்க." என்று மறுத்துவிட்டான்.

"முத்தா....அப்படிக்கூறி என் மனதை மேலும் புண் ணுக்காதே...கண்ணில்லாமல் திரும்பமாட்டாயா? உம்...சரி வீட்டிற்கு வரவேண்டாம்....நான் ஒரு இடத்திற்கு அழைத் துப் போகிறேன், மறுக்காமல் கிளம்பு." என்ருன் ரஞ்சன்.

போகும் வழியில் ஆனந்த பவனத்தின் வாயலில் காரை நிறுத்தினான். "வள்ளீ! சீக்கிரம் போய் சித்தியிடம் சொல்லிவிட்டுவா" என்று கதவைத் திறந்துவிட்டு துரிதப் படுத்தினான். உள்ளே சென்ற வள்ளி மின்னல் வேகத்தில் திரும்பி விட்டாள்.

அவள் கூறிய விஷயம்: "அம்மா! அவரு விடுதலை ஆயிட்டாரு எங்களைத் தேடவேண்டாம். நானும், மச்சானும் ரஞ்சன் ஐயாவோடப் போகிறோம்" இவ்வளவே.

மொட்டையாகக் கூறியதால் விஷயம் விளங்காத லக்ஷ்மி "வள்ளீ! வள்ளீ!" என்றவாறு ஓடிவந்தாள். அதற்குள் காரும் பறந்துவிட்டது.

அத்தியாயம் 24

தீபஸ்தம்பமா? தீபஜோதியா?

நாட்கள் உருண்டோடின. ஒருநாள் விடிற்காலை இருட்டு பிரிவதற்கு முன்பே ஒருகார் ஆனந்த பவனத்திற்குள் புகுந்தது. இரவு பகலாக ரஞ்சனின் வருகையை எதிர்பார்த்து தவித்துக் கொண்டிருந்த லக்ஷ்மி கதவைத் திறந்து உற்று நோக்கினாள்.

''சித்தீ!'' என்று கைகளை நீட்டியவாறு ரஞ்சன் ஓடி வந்தான். அவன் முகத்தில் ஆனந்தம் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. அவ்விருளிலும் அவன் முகம் பூர்ண சந்திரனைப்போல் ப்ரகாசித்தது.

அவனோடு இரு உருவங்களும் வந்தன. அவன் உணர்ச்சி வயப்பட்டு அவ்விருவரையும் தன் இருகைகளால் பிடித்துக்கொண்டு வந்தான். ''சித்தீ! பார்... நம் முத்துவை....'' என்றான்.

"யாரு நம் முத்துவா? ... ஆ வள்ளி...."

''ஆமாம் அம்மா முத்துதான்....எனக்குக் கண் வந்துட்டுதும்மா....பாருங்க''

"கண் வந்துவிட்டதா? என்னால் நம்பமுடியவில்லையே... ரஞ்சன் எல்லாம் ஒரே மர்மமாகவும் விசித்திரமாகவும் அல்லவா இருக்கிறது. உள்ளே வாருங்களப்பா...வள்ளி வாம்மா....'' என்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

சந்தடி கேட்டு ரகுவும், ரேவதியும் எழுந்து ஓடி வந்தனர்.

"முத்து...வந்துவிட்டாயா...ஆ....கண் வந்துவிட்டதா? எப்படி முத்து" என்று ரகு முத்துவை அணைத்துக் கொண்டான்.

"எல்லாம் உங்க அண்ணரு உதவியால்தான் ரகு" என்று ரஞ்சனைச் சுட்டிக் காட்டினான். ரஞ்சனின் முகத்தில் களிப்பு களிநடம் புரிந்து கொண்டிருந்தது.

"அண்ணா! நான் முத்துவின் கண்களையும், மானத்தையும் போக்க ஹேதுவாய் இருந்தேன். நீ அவனுக்குக் கண்ணைக் கொடுத்து, எனக்கு நிம்மதி யளித்த தெய்வம்" என்று மண்டியிட்டவாறு ரஞ்சனின் கால்களை கட்டிக் கொண்டான்.

'அண்ணனின் உதவியால்' என்றதும் லக்ஷ்மிக்கு சுரீர் என்றது. 'ஒருவேளை ரஞ்சன் தன் கண்களையே முத்துவிற்கு அளித்திருப்பானோ?' ரஞ்சனின் கண்களை உற்று ஊடுருவி நோக்கினாள்.

"ஏன் சித்தி அப்படிப் பார்க்கிறாய்...உட்காருங்கள்." என்றவன் தான் காரில் புறப்படும்போது வள்ளி வந்தது முதல், பிறகு நடந்த ஒவ்வொன்றையும் கூறிக்கொண்டே வந்தான். லக்ஷ்மி, ரகு, ரேவதி மூவரும் வாயைப் பிளந்து கேட்டுக்கொண்டிருந்தனர்.

"முத்து எப்படி சிறையிலிருந்து.......கோவிலுக்குப் போனான்? இது எங்கே...அது எங்கே?" என்று ரேவதி குறுக்கிட்டாள்.

"ஆம்...அதைச் சொல்ல மறந்துவிட்டேனே!...முத்து நீயே கூறிவிடு உன் அனுபவத்தை" என்றான் ரஞ்சன்.

முத்து தங்களோடு சகஜமாகப் பேசி, அவன் குரலைக் கேட்க வெகு நாட்களாகிவிட்டிருந்ததால் எல்லோரும் ஆவலுடன் அவனை நோக்கினர்.

"நான் விடுதலையடைஞ்சி.. தட்டுத் தடுமாறிக்கொண்டிருக்கும்போது, நம் தெருவிற்கெல்லாம் பாட்டுப் பாடிக் கொண்டு குருட்டுப் பிச்சைக்காரன் ஒருவன் வருவானே.. அவன் பாட்டு கேட்டது. 'அண்ணே..அண்ணே'ன்னு கூவினேன். என் அருகில் வந்தான். என் கண்போனதற்கு வேறு ஏதோ காரணத்தை ஜோடித்து கூறிவிட்டு, 'அண்ணே..என்னை கோவில் தீபஸ்தம்பத்துக்கு கொண்டு விட்டுடு. புண்ணியமாய்ப் போகும்' என்று வேண்டிக் கொண்டேன். அவனுக்குக் கோல் பிடிக்கும் பையனே என்னையும் அழைத்துப்போய்சேர்த்துவிட்டான்." என்றான் முத்து.

"முத்தூ........ ....இவ்வளவு கஷ்டப்பட்டாவது அங்கு போனாயே இந்த வீட்டிற்கு வர உனக்குப் பிடிக்கவில்லை." என்று வருந்தினாள் லக்ஷ்மி. பிறகு ரஞ்சன் பக்கம் திரும்பினாள்.

"சித்தி! உன் ஆவலை நான் அறிகிறேன். அன்றிரவே குளிர்ச் சோலைக்கு சென்றோம். டாக்டர் விலாசம் மாறியிருந்ததால், சிறிது அலைந்தோம். என்னையும் முத்துவையும் அவர் மறக்கவில்லை. விஷயத்தைக் கூறினோம். "எல்லாம் சரிதான்..இப்போது வைக்க திடீரென்று மாற்றுக் கண் ஏது?' என்று இடிபோல் ஒரு கேள்வி போட்டார். நான் முத்து கொடுத்த அதேக் கண்ணைக் கொடுக்கத் தீர்மானித்தேன். கூறவும் கூறினேன். லக்ஷ்மியின் அங்கம் பதறியது. "ஆ ரஞ்சன் கொடுத்துவிட்டாயா?"

"ஆத்திரப்படாதே சித்தி இத்தனை வேலைகள் முடிந்த பிறகும், உன் மனதில் ஒரு குறையும் வைக்க நம் முத்து விரும்பவில்லை. 'எசமான்! உங்கக் கண்ணை வாங்கிக் கொண்டு, இந்த பாவம் நிறைஞ்ச உலகத்தை நான் பார்க்க விரும்பல்லே. என் கண் தெரிகிறதே என்ற சந்தோஷம் இருக்காது. உங்கக் கண்ணை பார்க்கும்போது, என் மனது கலங்கும். மற்றவங்க வயிறு பகிறென்கும். இதுக்கு நான் இணங்கமாட்டேன்.கண்ணே வேண்டாமுங்க எனக்கு' என்று கூறிவிட்டான். அவன் உறுதியிலிருந்து நழுவவில்லை. சித்தி! நம் குடும்ப ரகசியங்களை அம்பலப் படுத்தாது, நம் கௌரவத்தைக் காத்து, நம்மை இவ்வுலகில் மனிதர்களாய் உலவச் செய்த புனிதவதி வள்ளி யிருக்கிறாளே. அவள் தன் நயனத்தை, தன் தெய்வத்திற்கு அளித்தாள்."

"என்ன வள்ளியா? வள்ளி! அப்போது உன் கண்?..."

"வள்ளியின் ஒரு விழி ஆட்டு விழி சித்தி! முத்துவிற்கு இரண்டு கண்களையும் கொடுக்க இயலாவிட்டாலும், உலகில் நடமாடித் திரிந்து, கண்டு களிக்க, போதுமான ஒரு கண்ணை அளித்துவிட்டார் அந்த தெய்வம். உலகம் எப்படி சுழல்கிறது சித்தி! முத்துவின் ஒரு கண் என்னிடத்தில், வள்ளியின் ஒரு கண் முத்துவிற்கு விசித்திரம். நான் இரண்டு கண்ணுமுள்ளவன். ஆனால், வள்ளியும் முத்துவும் ஒரு கண்ணுடைய பாதி அந்த...." ரஞ்சன் இப்படிக் கூறிக் கொண்டிருக்கும்போது முத்து அவன் வாயை இறுகப் பொத்தினான்.

"எசமான்! நீங்க இப்படி பேசி, இன்னும் மனசிலேயே வருத்தத்தை வச்சிக்கக்கூடாது. இதோ, ரகுவும், ரேவதியும், நீங்களும், அம்மாவும், என்னைச் சூழ்ந்து உட்கார்ந்துக்கிட்டு, ஆனந்தமாகப் பேசுவதே எனக்கும், வள்ளிக்கும்

ஆயிரம் கண்கள் இருப்பது போன்ற ஒரு சந்தோஷம்.'' என்று தேற்றியவாறு, தன் சந்தோஷத்தையும் வெளிப் படுத்தினுன்.

முத்துவின் சொற்களைக் கேட்ட ரகு, "முத்து! வள்ளீ! எங்கக் குடும்பத்தில் நாங்கள் தீபஸ்தம்பம்போல், சுடர் விட்டு ப்ரகாசிக்க வேண்டும் என்று தாத்தா, தீபஸ்தம்பம் ஏற்படுத்தினுர். ஆனல், ரஞ்சனுக்கு ஒருக் கண்ணையும், எனக்காக, உன் மானத்தையும் த்யாகம் செய்து, கண்ணை யும் பறி கொடுத்தாய். உன்னை அந்தகனுக்கிவிட்டோம். ஆனல், வள்ளி தன் கண்களை உனக்களித்து மர்மங் களை மூடி மறைத்தாள். ஆக நீயும் வள்ளியும்தான் தீபஸ்தம்பம் முத்து! எங்கள் குலத்தை விளங்க வைத்த ஜோதி" என்று உணர்ச்சி வேகத்தில் கூறியவாறு அவர்கள் கால்களடியில் விழுந்து விட்டான்.

முத்துவும் வள்ளியும், திடுக்கிட்டு எழுந்தனர். "சின்னையா! எழுந்திருங்க... இது தெய்வத்துக்கு அடுக் குமா. காலிலே விழலாமா?''

ரகுவைத் தூக்கி நிறுத்தி, அவன் முகத்தை ஆதூரத் தோடு நோக்கினுன் முத்து. அவன் இமையோரங்களில் நீர் கசிந்து கொண்டிருந்தது. ரகுவின் கண்ணீர் திரையி னூடே முத்துவின் வலது புருவத்திற்கு மேலிருந்த காயத் தின் வடு மங்கலாகத் தெரிந்தது. பாதிக்குமேல் மறைந்து விட்ட அவ்வடுவை வருடினுன்.

"முத்து! என் அசுரச் செயல்களின் அடையாளம் உங்கள் குடும்பத்திற்கு பரிபூரணமாகக் கிடைத்துவிட்டது. பல்லைப் போக்கி தாடையை சொட்டை விழச் செய்தேன். கண்ணோடு, புருவத்தின் மேலேயுள்ள வடுவும் என்னை என் றும் மறக்கச் செய்யாது. இப்படி ஒரு அற்புத வைத்தியம் இருக்கிறது என்று தெரிந்திருந்தால் என் கண்ணை அளித்திருப்பேனே முத்து''—ஏதேதோ கூறிக்கொண்டே போனுன்.

"சின்னையா! நிறுத்துங்க உங்கப் பேச்சை. பழைய கதை எதுக்கு? ரஞ்சன் ஐயா! உங்களுக்கு ஒரு புது விஷ யத்தை, சந்தோஷச் சமாசாரத்தைச் சொல்லத் துடிச்சுக் கிட்டிருக்காரு'' என்று முத்து அப்பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

"ரஞ்சன் புது விஷயம் என்ன? சீக்கிரம் சொல் லேன்'' என்று ரேவதி அதிக ஆவலுடன் வினவினுள். பழையப் பேச்சைக் கேட்டே புளித்திருந்த அவள் காது களைத் தீட்டிவிட்டுக் கொண்டாள்.

ரஞ்சனும் தொண்டையைக் கனைத்துக்கொண்டு ஆரம்பித்தான்.

"சித்தி! நீ ரகுவிற்கு, சிறு குழந்தையிலேயே மனைவி தேடி நிச்சயம் செய்துவிட்டாய். நானே, உனக்கு வேறொரு மருமகளும் மாப்பிள்ளையும்கூட தேடிவிட்டேன்"

ரேவதியின் முகம் நாணத்தால் சிவந்தது. இருந்தும் தன் மணாளன் யாரோ என்று கண்களை அகல விரித்தாள்.

"சித்தி! இந்த விஷயத்தில் எனக்கு பூரண சுதந்திரம் கொடுக்கவேண்டும்" என பீடிகை போட்டான். "எனக்கு கண் கொடுத்த குளிர்ச்சோலை டாக்டருக்கு ஒரு பெண் இருக்கிறாள். அழகும், சகல சௌபாக்கியங்களும் இருந்தும் கால் சற்று ஊனம் என்பதால் யாரும் அவளை மணக்க மறுத்து உதாசீனம் செய்கின்றனர். இதை அப்போதே அவர் கூறி வருந்தினார்.

அமெரிக்கா செல்லும் முன்பே, பேருதவி புரிந்த அவருடைய பெண்ணைதான் மணந்து கொள்வது என்று தீர்மானித்திருந்தேன். ஆனால் அதை யாரிடமும், அவரிடம் கூட கூறவில்லை. இப்போது முத்து விவகாரத்தையும் வெற்றியோடு முடித்த பிறகு, என் மனதிலுள்ளதைக் கூறினேன். பாவம்! அவருக்குதான் என்ன சந்தோஷம்! நன்றாயிருக்கும் பெண்களை யாரும் மணந்து விடுவார்கள். காலில் ஊனமிருந்தால் என்ன? மனம் ஊனமில்லாது, பரிபூரண நிறைவோடு, குணக் களஞ்சியமாக விளங்கினால் போதும் எனக்கு. சித்தி! நம் ரேவதிக்கு யார் தெரியுமா?"

எல்லோருடைய ஆவலையும் கிளறினான்.

"ரேவதி! சொல்லட்டுமா? நம் சதாசிவத் தாத்தாவின், பேரன் முரளிதான் உனக்கு ஏற்றவன்" என்று கூறி நிறுத்தினான்.

"ரஞ்சன்! என்ன ஆச்சரியம்! என் மனதிலுள்ளதும், உன் எண்ணமும் எப்படி ஒன்றாக அமைந்து விட்டது? நானும் முரளியைதான் நினைத்தேன். நம் குடும்பத்திற்கு ஊன்றுகோலாக விளங்கும் சதாசிவத்தின் குடும்பத்தோடு உள்ள நம் பிணைப்பு பிரிந்து போகக்கூடாது. அதற்கு இதுதான் சரியான வழி" என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். "ரஞ்சன்! அவர் குடும்பம் நம்மோடு பழகியிருந்தாலும், முறைப்படி கேட்கவேண்டும். நீ உனக்கு மனைவி தேடிக் கொண்டு வந்துவிட்டாலும், நான், ரேவதி, ரகு இவர்களோடு குளிர்ச்சோலைச் சென்று பெரியவர்களைச் சந்தித்து பேசவேண்டும். அதுதான் முறை. உன் விஷயத்தில் நான் தலையிடுவதில்லை. உன் மனதுபடி, உன்

த்ருப்திக்கு நீ இஷ்டப்பட்டு, மணந்து கொண்டால் நான் ஏன் தடுக்கிறேன்? மறுக்கிறேன்?''

"அம்மா! நம்ப பெரிய எசமான் தலே திவசம் முடிந்ததும், இந்த சுபக்காரியங்களைத் தொடங்கி, மூன்று கல்யாணங்களையும் 'ஜாம்ஜாம்'னு செய்து முடித்துவிடவேணும்'' என்று முத்து சந்தோஷப் பெருக்கில் உரக்கக் கூறினன்.

"ஆமாம்'' என்ருள் வள்ளியும்.

மணமக்களாகத் திகழப் போகிறவர்கள் வெட்கித் தலேகுனிந்தனர். லக்ஷ்மியும் ஆனந்தப் பரவசமானுள்.

கல்யாணமா? கார்த்தியா? என்பார்கள். அதுபோல் கல்யாண வீட்டின் கலைபயே ஒரு தனி அழகு கொண்டது. தட்டு பந்தலும், பச்சைத் தோரணங்களும், நியான்விளக்குகளையும் சொரிந்துகொண்டு, 'ஆனந்தபவனம்' ஆனந்த தேவதைபோல் காட்சியளித்தது.

பெரியவர்களும் சிறியவர்களும் ஓடியாடிக்கொண்டிருந்தனர். ஒருபுறம் அலங்காரமும், ஆர்பாட்டமுமாக இருந்தது. விருந்தாளிகள் வந்திறங்கியவாறிருந்தனர். சதாசிவ தம்பதிகள் அவர்களே வரவேற்பதில் ஈடுபட்டிருந்தனர். கார்கள் பறந்தவண்ணமிருந்தன. கேலிப் பேச்சும் கும்மாளமுமாக கல்யாணவீடு களேகட்டிக் கொண்டிருந்தது.

சரோஜா நிலேக்கொள்ளாது சந்தோஷத்தில் பூரித்தாள். புதுப் பாவாடை சலசலக்க, நகைகள் குலுங்க, குஞ்சலம் ஆட, தான்தான் அதிக வேலேகள் செய்வது போல் குறுக்கும், நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தாள்.

முகூர்த்தப் பந்தலில் நெக்கரித்தது கூட்டம். சிநேகிதர்களும் உறவினர்களும் அவ்வீடு நிறைய பொங்கி வழிந்தனர். பரிசுகளோ வைக்க இடமில்லாமல் குவிந்து கொண்டேயிருந்தது. கண்ணேப் பறித்தன அனேத்தும். ஆனல்! முத்துவும் வள்ளியும் தங்கள் சக்தி மீறி அளித்த பரிசுதான், மூன்று தம்பதிகளுக்கும், வானத்தில் மிதக்கும் நக்ஷத்திரக் கூட்டத்தின் மத்தியில் துலங்கும் முழுமதியைப் போல் ப்ரகாசத்துடன் தோன்றியது.

மணப்பந்தலிலிருந்து எழுந்த மூன்று ஜோடிகளும் பெரியவர்களேயெல்லாம் நமஸ்கரித்துக் கொண்டே வந்தனர். ஆறு தாமரை மலர்கள் கொத்தாக நடந்து வருவதைப்போல் இருந்தது அவர்கள் தோற்றம். ஆனல் ஒரு மலர் மட்டும் வாடி தன் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டிருந்தது ஏன்? மற்ற மலர்களுக்கு வீசும் சூரிய ஒளி இம்மலருக்கு மட்டும் வீசவில்லேயா? அவ் வாடியிருந்த தாமரை மலர் ரஞ்சனின் மனேவிதான்.

மற்ற மணமக்களைவிட தான் தாழ்ந்திருப்பதாக ஓர் எண்ணம் அவள் மனதில். 'தன்னை புக்ககத்து மனிதர்கள் எப்படி நடத்துவார்களோ? என்ன சொல்வார்களோ' என்ற கிலிதான் அவள் அழகிய முகத்தை வாடச் செய்தது.

லக்ஷ்மியை அவனைவரும் வணங்கி எழுந்தனர். தன் மூத்த மருமகளின் முகவாட்டத்தின் காரணத்தை நொடியில் அறிந்தாள் அவள்.

அன்புடன் அணைத்துக் கொண்டாள். "நீ ரஞ்சனைக் கணவனாக ஏற்க எத்தனை புண்ணியம் செய்தாயோ அம்மா! அதே போல் உன்னை மருமகளாக அடைய அதை விட நான் அதிக அதிர்ஷ்டம் செய்திருக்கிறேன். உன் தந்தையின் ஒவ்வொரு செயல்களிலிருந்தே, அவர் குணத்தையும், அவர்கள் ப்ரதிபிம்பமான உங்கள் குணத்தையும் அளந்து விடலாமம்மா. எங்கள் வீட்டு கிருகலக்ஷ்மி, மூத்த மருமகள் நீதான்"—என கூறி இழுத்து உச்சி முகர்ந்தாள்.

"சித்தி! அவளுக்கு உள்ளுக்குள் தன்னை மட்டமாகக் கருதுவார்களோ என்ற பயம். நீதான் அவளது கிலியைப் போக்கவேண்டும்" என்றான் ரஞ்சனும்.

வாடியிருந்த அப் புதுமலர், மலர்ச்சி பெற்று மணம் வீசியது. மந்தகாசம் துள்ள "அம்மா! நம் குடும்பங்கள் இரண்டும் தேனும் பாலும்போல் சேர்ந்திருக்கையில் அதிலேது கசப்பு?" என்று தேனினும் இனிய குரலில் மொழிந்தாள்.

இக் காட்சியைக் கண்டு களித்துக் கொண்டிருந்த அத்தனைப் பேர் கண்களிலிருந்தும் ஆனந்த பாஷ்பம் பொங்கிப் பெருகியதோடு, அவள் கூறிய அன்பு மொழி எல்லோருடைய செவிகளிலும் அமுதம்போல் பாய்ந்தது.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

சுபம்.

வாலாடி சுப்ரமண்ய ஐயர் அங்கு வந்து சேர்ந்து பாட்டியை நோக்கி "என்ன சமாசாரம்" என்றார்.

பாட்டி:—நானும் அப்போது முதல் பார்க்கிறேன். தன்னன்னு தொன்னன்னு என்றும்...கரிசா மரிசா...என்றும் அர்த்தம் இல்லாது ஏதோ கத்துகிறாரே...எப்போது நின்னு கதை பண்ண போகிறார். நேத்திக்கு கதை எவ்வளவோ அழகா இருந்தது என்று சொல்லும்போது, பாவம் காரியதரிசி சிரிக்காமல் என்ன செய்ய முடியும்? மெள்ள அவர் தன்னை சமாளித்துக்கொண்டு "பாட்டி...டிக்கெட்டில் இன்று என்ன போட்டு இருக்கிறது பார்த்தீர்களா?"...என்றார்.

பாட்டி:—ஐயோ ராமா! பட்டிக்காட்டிலே இருக்கிற எனக்கு படிக்கவா தெரியும். எங்க அம்மாஞ்சி பெண் கல்யாணத்திற்கு இந்த ஊருக்கு வந்தேன். ஏதோ கதை நடக்கிறது, இந்த கடுதாசியைக் கொண்டு காட்டு, உள்ளே விடுவா. போய் கேளுன்னு. நேத்தி கேட்டேன் அழகா இருந்தது. இன்னிக்கும் அப்படிதான் இருக்கும்னு வந்தேன்...

இன்னிக்கு என்னடான்னு...தன்னன்னு, தொன் தன்னு...வந்தானு...போனுன்னு...இதை எத்தனை நாழி கேட்பா?"...அதற்கு மேல் சபையின் அமைதி அடியோடு குலைந்து கைகொட்டலும், சிரிப்பொலியும் பலமாக எழுந்தது.

பாடகர் காரியதரிசியை அழைத்து விஷயத்தை அறிந்து கொண்டார். உடனே சாந்தத்துடன் "பாட்டியம்மா இங்கே வாங்கோ...ஐயோ பாவம் இங்கு ஹரிகதை நடப்பதாய் எண்ணி வந்துவிட்டீர்கள், அதுதானே?...வருத்தப்படாதீர்கள்...டவுன் கோகலே ஹாலில் பஞ்சாபகேச சாஸ்திரிகள் கதை இன்று நடக்கிறது. இந்தாங்கள் ரூபாய்...அங்கு போய் ஆனந்தமாய் கேளுங்கள்" என்று தன் மடியிலிருந்து ரூபாய் எடுத்து நீட்டினார். ஐயோ பாவம், கிழவி மூஞ்சியைப் பார்க்கவேண்டுமே! அசடு வழிய "ஐயோ...நான் ஏன் இங்கே வந்தேன். நான் பைத்தியக்காரியா...பிச்சைக்காரியா" என்று கோபத்துடன் கத்தியவாறு கூட்டத்தை மிதித்து தள்ளிக் கொண்டு மின்னல்போல் மறைந்துவிட்டாள்.

பெரும் மழைக்குப் பிறகு அமைதி ஏற்படுவதுபோல் சலசலப்பு ஓய்ந்ததும் பாகவதர் வெகு பொறுமையுடன் சிரித்துக் கொண்டே "ஐயோ பாவம் பட்டிக்காட்டு பாட்டிமார்களுக்கு கதை என்றால் ஒருவாறு புரியும். இந்த கர்னாடக சங்கீதத்தை இங்கு கூடி இருப்பவர்களில் ஒரு சிலருக்குக்கூட அனுபவிக்க முடியாது என்றால்...பாட்டியின் காதில் கரஹரப்ரியா ராகம் கரகர என்று அறுக்காமல் என்ன செய்யும்?" என்றார். மீண்டும் ஒரு கரகோஷம் வானை அளாவியது.

ஜகன் மோகினி

வருடச் சந்தா-உள்நாடு ரூ. 3.		வெளிநாடு 3-50 NP.
தனிப்ரதி	,, 25 NP.	,, 30 NP.

காளிதாஸர் கனவு

11, இராம தர்சனம்: ரகுவம்சம்.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அந்த விச்வஜித் யாகத்தில் ரகுமகாராஜன் தான் உலகத்தை வென்று உலக மன்னர்கள் கப்பமாக அளித்த பணங்களையும் திரவியங்களையும் தட்சிணையாகவும் தானமாகவும் கொடுத்ததால், அவனுடைய பொக்கிஷத்திலோ அரண்மனையிலோ ஒருவிதமான சொத்தும் இல்லை. அச்சமயத்தில் வரதந்து ரிஷியின் சிஷ்யரான கௌத்ஸர் அவனிடம் வந்தார். குருதக்ஷிணைக் கொடுப்பதற்காகப் பொருளை நாடி ரகுமகாராஜனிடம் வந்தார். அரசனிடம் தங்கப் பாத்திரம் இல்லாததால் கையில் இருந்த மண் பாத்திரத்தில் தண்ணீரை வைத்துக்கொண்டு அவரை அரசன் உபசரித்தான்.

ஸம்ருண் மயே வீதஹிரண்மயத்வாத்
பாத்ரே நிதாயார்க்யமனர்க சீல: |
ச்ருதப்ரகாசம் யசஸா ப்ரகாச:
ப்ரத்யுஜ்ஜ காமாதிதி மாதிதேய: ||

கௌத்ஸர் அரசனிடம் கூறினர்: "நான் குருதக்ஷிணையாக பதினன்கு கோடி ரூபாய்கள் கொடுக்கவேண்டும். ஆனல் உன்னுடைய எல்லா சொத்தையும் வேள்வியில் தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டு நீ ஏழையரசனாக இருப்பதால் உன்னிடம் நான் பணம் கேட்பது பொருத்தமல்ல. நான் வேறிடஞ்சென்று என் கோரிக்கையைப்பூர்த்தி செய்துகொள்ளுகின்றேன் என்றார்." அப்பொழுது அரசன் அவரை இரண்டு மூன்று நாட்கள் காத்திருக்கும்படி வேண்டினன். அன்றிரவே குபேரனை நோக்கிப் படையெடுத்துச்சென்று அவனை வென்று தேவையான பணத்தைக் கொண்டு வருவதாக நிச்சயம் செய்தான். இதை அறிந்த குபேரன் தன் நிதிகளால் அரசனுடைய பொக்கிஷத்தை நிறையும்படி செய்தான். அதையறிந்த அரசன் உடனே கௌத்ஸரை வரவழைத்து அவருக்கு வேண்டிய தனத்தையளித்துக் களித்தான். அவருடைய ஆசியின் மகிமையால் அவனுக்கு ஒரு அழகிய குமாரன் பிறந்தான். தந்தையுடைய ஒளியும், ஆற்றலும், பெருமையும் மகனிடத்தில் விளங்கின. ஒரு தீபத்திடத்தில் மற்றொரு தீபத்தை ஏற்றினல் எப்படி இரண்டு விளக்குகளும் நன்கு விளங்கும், அப்படி இருவரும் ஒளியுடன் விளங்கினர்கள்.

ரூபம் ததேோஜஸ்வி ததேவ வீர்யம்
ததேவ நைஸர்கிக முன்னதத்வம் |
ந காரணத் ஸ்வாத் பிபிதே குமார:
ப்ரவர்த்திதோதீப இவப்ரதீபாத் ||

அவனுக்கு அரசன் அஜன் என்று பெயர் வைத்தான்.

அஜன் எல்லா வித்தைகளையும் கற்று விளங்கினான். அப்பொழுது விதர்ப்ப தேசத்தில் அரசகுமாரியான இந்துமதியின் சுயம்வரம் நேர்ந்தது. அதற்கு அஜன் தன் படைகளுடன் சென்றான். போகும் வழியில் நர்மதையாற்றின் கரையில் தங்கியிருந்தான். அங்கே ஒரு பெரிய காட்டு யானை அவ்விடம் புகுந்துப் பெருங்குழப்பத்தை யுண்டாக்கவே அதை அவன் ஒரே அம்பால் வீழ்த்தினான். அதன் உடலிலிருந்து ஒரு கந்தர்வன் வெளிப்பட்டு விமானத்தில் ஏறினான். அவன் அஜனை நோக்கி "நான் மதங்க ரிஷியின் சாபத்தால் காட்டு யானையாகப் பிறக்க நேர்ந்தது. இப்பொழுது உன்னால் விடுவிக்கப்பட்டுச் சுய உருவத்தை யடைந்தேன். உனக்கு சம்மோகனம் என்ற அஸ்திரத்தை உபதேசஞ் செய்கின்றேன்" என்று கூறி அந்த அருமையான அஸ்திர வித்தையை அவனுக்கு உபதேசஞ்செய்து மறைந்தான்.

(தொடரும்)

பாட்டிக்கு த்ருஷ்டியா! பட்டாசு வேடியா!

'கதையின் தலைப்பை என்ன என்று போடுவது' என்று வினவியதற்கு 'கிழக்கு வெளுத்தது' என்று போடச் சொன்னார். 'ஆ! என்னப் பொருத்தம். இத்தனை நாளாக அந்தகாரத்தில் தவித்துக்கொண்டிருந்த உனக்கும் கிழக்கு வெளுத்துவிட்டது பாட்டி!' என்றேன் உற்சாகத்துடன். 1—1—58 இதழ் முதல் 'கிழக்கு வெளுத்தது' வெளிவரும். இது எல்லாவற்றிற்கும் மேலான மகிழ்ச்சிகரமான விஷயம்.

ஹாஸ்ய நடிகர் L. நாராயணராவ் என்றால் அறியாதவர் யாரும் இருக்கமாட்டார்கள். இவ்விதழில் வாழ்க்கையில் ஒரு குறிப்பில் தன்னுடைய ஒரு வேடிக்கையான அனுபவத்தைத் தெரிவித்திருக்கிறார். அதேபோல் தம் வாழ்க்கையில் குறிப்பிட்ட அநேக சாரமான, ருசிகரமான, ஹாஸ்யமயமான சம்பவங்களை ஜனவரி இதழிலிருந்து நமக்களிக்கப் போகிறார். தம் நடிப்பின் மூலம் சிரிப்பைச் சிந்த வைக்கும் அவர், தம் எழுத்தின் மூலமும் அப்படியே செய்வார் என்பதில் சந்தேகமேயில்லை. இவர் எங்கள் வீட்டிற்கு வந்து என் தந்தையும் இவரும் பேச அமர்ந்துவிட்டால் நேரம் ஓடுகிறதா? பேச்சு ஓடுகிறதா? என்பதே புரியாது. நாங்களும் வாயைப் பிளந்தவாறு அவரது ஹாஸ்ய வெடிகளை சுவைத்துக் கொண்டிருப்போம். நாங்கள் சிறுவர்களாயிருக்கும்போது அவர் எங்கள் வீட்டிற்கு வந்தால் 'பாதாம் ஹல்வா' வோடுதான் வருவார். அதனால் நாங்கள் 'பாதாம் ஹல்வா மாமா' என்றே அன்றிலிருந்து இன்றுவரை அழைக்கிறோம். அப்படிப்பட்ட பெரியவர், **தமது ஜீவிய சரிதத்தைத்** தொடர்ச்சியாகக் கொடுக்க முன்வந்ததற்கு எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடவுள் க்ருபையாலும் வாசக அன்பர்களின் ஆதரவாலும் பெரியோர்களின் ஆசியினாலும் என் தந்தையின் 'தீபஸ்தம்பம்' ஒருவாறு முடிவுபெற்றது. என் தந்தையே தெய்வமாயிருந்து என் சிற்றறிவை ஊக்கி தன் காரியத்தை முடித்துக் கொண்டுவிட்டார் என்பதே என் தீர்மான நம்பிக்கை. அவரே என் பாட்டியின் பேனாவில் ஓடும் உலராத ஊற்றுக் கற்பனை மையாக இருந்து கிழக்கு வெளுத்ததை நிதர்சனமாக்க எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன். அவர் திருவடியிலேயே **தீபஸ்தம்பத்தை** அர்ப்பணித்து, என் தந்தைக்கு அஞ்சலி செய்கிறேன்.

இவ் வருடம் மோகினிக்கு அத்புதமான விஷய தானங்களைச் செய்து சிறப்பித்த மகான், ஸ்ரீ ராஜாஜி உள்பட எல்லா அன்பர்களுக்கும் எங்கள் வந்தனத்தை செலுத்துகிறோம்.

புத்தாண்டு முதல் இதழிலிருந்து பல புதிய அம்சங்களையும் நேயர்களுக்கு ஜகன் மோகினி மகிழ்வுடன் அளிப்பாள்.

என்றும்போல் வாசக அன்பர்கள் சந்தாதாராகச் சேர்ந்து மோகினியை ஆதரித்து பேருதவி புரியுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வை. மு. விஜயலக்ஷ்மி.

Jaganmohini (Dec. 1957) Regd. No. M. 2210

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 6-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்
ரூ. 2-4
ஞானதீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
ஞானக் குன்று
ஜீவநாடி
ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைக்கப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்
ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா
ரூ. 1-2
அபராதி
ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா.12
பத்மமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்
அணா 8.
உருக்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாம்ருதயம் 0-12

வை. மு. பத்மினி

ரூ. 1 8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்,
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

சுத்தானந்த பாரதி
காந்தி கீர்த்தனம் 3-8

ப்ர.ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமஉரை 1-0
அபூர்வ ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.